பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 02 | 17 மார்ச் 2018 | விதி : 92



காலம் கடத்தும்
ஆணைக்குழுக்கள்



தமது கட்சியை தாமே
அழிக்கும் தனிநபர்கள்
மேலாதிக்கம்



மரத்துடன் திருமணம்



வேலணை

# இமயத்தின் மறைவு




‘யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!’





திருமணத்துக்குப் பின்னர் மீண்டும் நடிக்க வந்திருக்கிறார் நஸ்ரியா.

அஞ்சலி மேனன் இயக்கும் மலையாளப் படம் ஒன்றில் அவர் நடிக்கிறார்.

பிருதிவிராஜ், பார்வதி ஆகியோருடன் சேர்ந்து எடுத்த படத்தை தனது சமூக வலைதளத்தில் வெளியிட்டு தனது சந்தோசத்தைப் பகிர்ந்துள்ளார்.




உதயநிதி ஸ்ராலின் நடிக்கவுள்ள புதிய படத்தில் கார்த்திக் நடிக்கவுள்ளார். அட்லியின் உதவியாளர் இந்தப் படத்தை இயக்கவுள்ளார்.

படத்தின் நாயகியாக 'மேயாத மான்' படத்தின் பிரியா பவானி சங்கர் நடிக்கிறார்.

'இறுதிச் சுற்று' படம் மூலம் தமிழ் ரசிகர்களுக்கு அறிமுகமானவர் ரித்திகா சிங். நிஜ குத்துச் சண்டை வீராங்கனையான இவர் முழுநேர நடிகையாகி விட்டார்.

'ஐயாம் சொறி' என்ற குறும்படத்தில் அண்மையில் நடித்திருந்தார். பெண்களுக்கு எதிரான பாலியல் தொல்லைகள் பற்றிப் பேசியது அக்குறும்படம்.

"முதலில் நான் பெண். பிறகுதான் நடிகை. உடல், மன ரீதியான துன்புறுத்தல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பெண்கள் ஏதாவது ஒரு தற்பாதுகாப்புக் கலையை கற்று வைத்திருக்க வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.



ஏ.ஆர்.முருகதாஸின் இயக்கத்தில் 62 ஆவது படத்தில் நடிக்கிறார் விஜய். இந்தப் படமும் 'கத்தி' படம் போன்று விவசாயிகள் சம்பந்தப்பட்ட கதைதான்.

தமிழக விவசாயிகள் எவ்வாறெல்லாம் நசுக்கப்படுகிறார்கள், அவர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்பதுதான் படத்தின் கதை. இதில் அரசியலும் நன்கு கலந்திருக்கிறதாம்.

ஹன்
அவரின
நடிகர்
செய்து
முன்
நாயகர்
ஹன்சி
சொல்
வாய்ப்ப
இந்
தனக்கு
என்று
அவரின
முனுசா

பிரி
திருமன
தொட
திருமன
நடிக்க
படத்

'நாடோடிக
இரண்டாம் பா
உருவாக்கப்படு
படத்தில் சசிக்கு
எம்.எஸ். பாஸ்
ஆகியோர் நடி
இந்தப் படத்
'சுந்தரபாண்டி
இரண்டாம் பா
உருவாக்கப்படு
அறிவிக்கப்பட்
2012 இல் வெ
படத்தில், சசிக்
மேனன் ஆகியே
என்பது குறிப்ப



# இமயத்தின் மறைவு

மேல் வரிசைப் பற்கள் இல்லை - கீழே இருக்கும் சில பற்களும் மேல் உதட்டை அமத்தியவாறு வெளியில் நிற்கும். வலப்பக்கமாக சாய்ந்து நிற்கும். நெற்றியை அதிகம் மறைக்காத மயிர். கமெரா, சென்சர் பொருத்தப்பட்ட கண்ணாடி, கணனியுடன் இணைக்கப்பட்ட சக்கர நாற்காலி. இடது கையின் மேலாக வைக்கப்பட்ட வலது கை சுருண்டுபோன உடம்பு. கன்னத்தின் சில தசைகள் தவிர உடலின் அனைத்துப் பாகங்களும் செயலிழந்து விட்டன.

இத்தனை குறைகளுடனும் ஒருவர் வாழ்வதே பெரும் விடயம் என்றால், விஞ்ஞானிகளே விக்கித்து நின்ற விடயங்களுக்கு சாதாரணமாக விளக்கம் கொடுத்திருக்கிறார். பூமியின் பிறப்பு, அண்டவெளியின் பிறப்பு எல்லாம் கடவுளின் படைப்பு என்று ஞானிகள் கூறிய விடயங்களை அநாயசமாக மறுத்து புதிய கோட்பாடுகளை முன்வைத்தவர் இயற்பியல் அறிஞர் ஸ்ரீபன் ஹக்கின்ஸ். ஆம், அவரின் பெயரை உச்சரிக்காதவர்கள் அண்மையில் இருக்கப் போவதில்லை. கடவுளே கதி என்று நம்பியிருப்பவர்களையே அண்டத்தின் உருவாக்கம் பற்றி அவர் கூறிய கருத்துக்களை ஏற்கச் செய்தன - அல்லது சிந்திக்க வைத்தன.

இதனால்தான் கலிலியோ கலிலி, ஐசக் நியூட்டன், அல்பேர்ட் ஐன்ஸ்டின் வரிசையில் வைத்து அவரைப் போற்றுகின்றனர். பிறப்பால் பிரிட்டிஷ் நாட்டவரான ஸ்ரீபன் ஹக்கின்ஸ் பிரபஞ்சத்தின் தோற்றம், காலப் பயணம், வேற்றுக் கிரகவாசிகள், கருந்துளைகள் போன்றவை பற்றிய தனது சிந்தனைகளால் விஞ்ஞான உலகை உலுக்கியவர். அறிவியல் கோட்பாடுகளை விளக்கும் ஒரு புத்தகத்தை ஒரு கோடி பிரதிகள் விற்க முடியும் என்று நிரூபித்துக் காட்டிய ஜனரஞ்சக இயற்பியலாளர் அவர்...

பிரிட்டனில் 1942 ஆம் ஆண்டு, ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர் ஸ்ரீபன் ஹக்கின்ஸ். தந்தை மருத்துவர். தாயார் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர். ஆனால் ஸ்ரீபன் படிப்பில் சாதாரண ரகம். இருந்தாலும் ஏன் - எதற்கு - எப்படி என்ற கேள்விகளை எழுப்பி, விடை தேடுவது அவரது இயல்பாக இருந்தது. இதனால், பாடசாலையில் அவருக்கு வைக்கப்பட்ட பட்டப் பெயர் ஐன்ஸ்டின். தன்னைப்போல் மகனை மருத்துவராக்கவே தந்தை விரும்பினார்.ஸ்ரீபனுக்கோ இயற்பியல் படிப்பதில் ஆர்வம். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் இயற்பியலையும் வேதியியலையும் படித்தார்.

மூன்றாவது ஆண்டில் படித்துக்கொண்டு இருந்தபோது, தனக்கு ஏதோவொரு விநோத நோய் வந்திருப்பதை உணர்ந்தார். காரணமின்றி அடிக்கடி கீழே விழுந்தார். அவரது தசை மாதிரிகளை எடுத்துப் பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்கு தசை உருக்கி நோய் Amyotrophic Lateral Sclerosis வந்திருப்பதை உறுதி செய்தனர். இந்த நோய், சுயமான தசை இயக்கங்களை ஆட்சி செய்யும் நரம்புச் செல்களைச் சிதைத்துவிடும். அந்த நோய் முற்றிவிட்டதால் அவர் இரண்டு வருடங்களுக்கு மேல் உயிர் வாழ முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

ஆனால், சக்கர நாற்காலியில் இருந்தபடியே பல்கலைக்கழக ஆய்வை முடித்து, பேராசிரியர் ஆனார். திருமணம் முடிந்தது. மூன்று பிள்ளைகளுக்கும் தந்தையானார். 1970 முதல், ஸ்ரீபன் அண்டவெளிக் கருங்குழிகள் பற்றி ஆய்வுகள் செய்ய ஆரம்பித்தார். ஒளித்துகளை கருங்குழிகள் விழுங்கிவிடும் என்றும் கருங்குழியின் வெப்பத்தால் கதிர்வீச்சு எழுகிறது என்றும் அவர் கண்டறிந்த கோட்பாடுகள், இயற்பியல் உலகில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளன.

1985 ஆம் வருடம், அவர் அணுத்துகள் ஆராய்ச்சிக்காக ஜெனிவா சென்றவருக்கு, நோய் முற்றியது. உடல் இயக்கங்கள் பெருமளவில் செயலிழந்துவிட்டன. அவர் இன்னும் சில மணி நேரம்தான் உயிருடன் இருப்பார் என்றனர் மருத்துவர்கள். உடனடியாக அவரைக் கேம்பிரிட்ஜ் மருத்துவமனைக்கு விமானத்தில் கொண்டு சென்றனர். அங்கு நடந்த தொண்டைக்குழி அறுவை சிகிச்சையால் உயிர் பிழைத்தார். ஆனால், அவரது குரல் முற்றிலும் அறுந்து போய்விட்டது. தனது உடல் தசைகள் தன் கட்டுப்பாட்டில் இல்லாவிட்டாலும், மூளையும் சிந்தனையும் முழு உற்சாகத்துடன் இருக்குமாறு, அவர் தனது சிந்தனைப் போக்கை அமைத்துக்கொண்டார்.

ஸ்ரீபனின் கண் புருவ அசைவுகளைப் படம்பிடித்து, அவற்றையே வார்த்தைகளாக மாற்றும் கணிப்பொறி மென்பொருளை உருவாக்கிய அவரது மாணவர்கள், அதற்கான கருவிகளை அவரது சக்கர நாற்காலியில் பொருத்திக் கொடுத்தனர். இதனால், தனது குறைபாட்டைப் பற்றிக் கவலைப்படாமல், அதிகமாகச் சிந்தித்து நிறைய எழுதினார் மாணவர்களுக்கு அதிக உற்சாகத்துடன் பாடம் நடத்தினார்.

'A Brief History of Time' என்ற புத்தகத்தை எழுதினார். அதுதான் ஸ்ரீபன் ஹக்கின்ஸை புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றது. இதுவரை ஒரு கோடிக்கும் அதிகமான பிரதிகள் விற்றுள்ள அந்தப் புத்தகம், சண்டே ரைம்ஸ் இதழில் 237 வாரங்கள் முதலிடத்தில் இருந்து சாதனை படைத்தது. பிரபஞ்சம் உருவானதற்குக் காரணமான பெருவெடிப்பு குறித்த கருத்தையும், அதற்கு முந்தைய காலகட்டத்தையும் இதில் அவர் விளக்கியுள்ளார். 'காலம் எப்போது தொடங்கியது? எப்போது முடியும்? காலத்தைப் பின்னோக்கிச் சென்று காண முடியுமா? விண்வெளிக்கு எல்லை உண்டா?' என எல்லோர் மனதிலும் இருக்கும் கேள்விகளுக்கு அறிவியல் ரீதியாக பதில் சொல்லி மலைக்கவைத்தார் ஸ்ரீபன்.

2010ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஸ்ரீபன் ஹக்கின்ஸின் The Grand Design என்று நூல் உலகளாவிய சர்ச்சைகளை உருவாக்கியது. இந்த நூலில், இந்தப் பிரபஞ்சம் உண்டானதில் கடவுளின் பங்கு இருக்கலாம் என்ற நியூட்டனின் கோட்பாட்டை விமர்சனம் செய்திருந்தார். பிரபஞ்சம், சுயம்புவாக உருவானது என்று நிறுவிய ஸ்ரீபன் உலகம் கடவுளால் வடிவமைக்கப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் இல்லை என்று நிறுவுகிறார்.

“புவி ஈர்ப்பு விசை போன்ற இயற்பியல் விதிகள் உண்மையானவை என்பதால், இந்தப் பிரபஞ்சம், இயற்பியல் விதிகளின்படி தன்னைத்தானே உருவாக்கிக் கொண்டிருக்க முடியும் என்பதும் உண்மை. பிரபஞ்சத்தின் தோற்றம், உயிரினங்களின் தோற்றம், மனித இனத்தின் தோற்றம் அனைத்துமே அறிவியல் விதிகளின்படி இயல்பாக நடந்திருக்க முடியும். கடவுள் என்ற ஒருவர், திடீரென ஒரு நாள் சுவிற்சைத் தட்டி பிரபஞ்சத்தைப் படைத்தார் என்று சொல்லி, எதற்காக இங்கே கடவுளை உள்ளே கொண்டுவர வேண்டும்?” என்று அவர் எழுப்பிய கேள்வி அறிவியல் பார்வையுடன் அனைத்தையும் பார்க்க வலியுறுத்தியது.

புனைகதைகளின் சுவாரசியத்துடன் காலப் பயணம் குறித்து அறிவியல் ரீதியில் விளக்கியவர் ஸ்ரீபன் ஹக்கின்ஸ் மட்டுமே. “இறந்த காலத்துக்கான காலப் பயணம் சாத்தியமில்லை என்பது சோகமான உண்மை. டைனோசர் வேட்டைக்காரர்களுக்கு இது ஏமாற்றம் தரலாம். வரலாற்று ஆசிரியர்களுக்கு நிம்மதி தரலாம்” என்று அறுதியிட்டுக் கூறிய ஸ்ரீபன், எதிர்காலத்துக்குள் காலப் பயணம் மேற்கொள்வது கோட்பாட்டு ரீதியில் சாத்தியமே என்றும் கூறினார்.

“ஒளியின் வேகத்தில் பயணிக்கும் கப்பலை நம்மால் உருவாக்க முடிந்தால், அதில் நாம் புறப்பட்ட 6 ஆண்டுகளுக்குப் பிறகு, கப்பல் தளத்தின் ஒருநாள், பூமியின் ஒரு முழு ஆண்டுக்கு நிகராகும். நமது கப்பல் உண்மையாகவே எதிர்காலத்தில் பறந்துகொண்டிருக்கும். மனிதன் தன் வாழ்நாளுக்குள்ளேயே, அசாத்தியமான தொலைவைக் கடந்து பயணிக்க முடியும். பிரபஞ்சம் எவ்வளவு விநோதமாக உள்ளது என்பதை நாம் அறிய முடியும்” என்று சுவைபட விளக்குகிறார் அவர்.

அண்டப் பெருவெளியில் பூமியைப் போன்ற கிரகங்கள் இருக்கக் கூடும் என்றும், அத்தகைய வேற்று கிரகவாசிகள் நம்மைவிட முன்னேறியவர்களாக இருக்கக் கூடும் என்றும் ஸ்ரீபன் ஹக்கின்ஸ் கருதுகிறார். அத்தகைய வேற்று கிரகவாசிகளை நாமாக தேடவேண்டாம் என்றும் அவர் வலியுறுத்துகிறார். “கொலம்பஸ் வந்ததால் உள்ளூர் அமெரிக்க மக்கள் பாதிக்கப்பட்டதுபோல், வேற்று கிரகவாசிகள் இங்கு வந்தால், மனிதகுலம் பாதிக்கப்படலாம்” என்பது அவரது கருத்து.

உடலின் பல பாகங்கள் பெருமளவு செயல் இழந்த நிலையில், 2005ஆம் ஆண்டு, பி.பி.சி தொலைக்காட்சி நிலையத்துக்கு சக்கர நாற்காலியில் அழைத்துவரப்பட்டார் 63 வயதான ஸ்ரீபன் ஹக்கின்ஸ். “வாழ்க்கை எப்படி இருக்கிறது?” எனக் கேட்டார்கள். “முன்பைவிட மிகவும் சுவாரசியமாகவும், சவால்கள் நிறைந்ததாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது” என்றார். இந்த உடல்நிலையுடன் உங்களால் உண்மையிலேயே சந்தோசமாக இருக்க முடிகிறதா என்று அடுத்த கேள்வி தயக்கத்தோடு கேட்கப்பட்டது. “எதை இழந்தீர்கள் என்பதல்ல என்ன ஆற்றல் உங்களிடம் மீதம் இருக்கிறது என்பதே வாழ்க்கையில் முக்கியம்” என்றார் ஸ்ரீபன் ஹக்கின்ஸ்.

உண்மைதானே! மனித குலத்தின் பெரும் இயற்பியலாளன் - நம் காலத்தில் வாழ்ந்து மறைந்த ஸ்ரீபன் ஹக்கின்ஸ் என்ற பெரும் அறிஞன் என்றும் நம்முடன் வாழ்ந்து கொண்டே இருப்பார்... ●

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்

சாமிக்கு மொட்டை போடனுமுன்னு சொன்னாங்க..நம்பி கோவிலுக்கு போனா..எனக்கு மொட்டப்போட்டுட்டாங்க...




வர்ர....கோபத்துக்கு....

நானும் அரை மணிநேரமா காந்தத்த வச்சி ஒட்டி பாக்குறேன் ஒட்டவேமாட்டுது...




பேரிச்சம் பழத்துல இரும்பு சத்து இருக்குன்னு சொன்னாய்ங்க...

கல்லு மாதிரி உக்கார்ந்து இருக்கானே...இவனுக்காகத் தான் சொன்னாங்களோ...





கல்லானாலும் கணவன்னு.

குருவே, என்னிடம் உள்ள குறைகளை எப்படித் தெரிந்து கொள்வது?




சிஷ்யா, ரொம்ப சிம்பிள். உன் மனைவியிடம் போய் 'கொஞ்சம் வெயிட் போட்டிருக்காய்' என்று மட்டும் சொல். உன் குறைகள் மட்டுமல்ல, உன் பரம்பரையில் உள்ள அத்தனை பேரின் குறைகளையும் புட்டு புட்டு வைப்பாள்.



சைக்கிள் கற்றுக்கொடுக்க அப்பா நம்மிடம் காட்டிய பொறுமையை அவருக்கு நாம் மொபைல் கற்றுக்கொடுப்பதில் காட்டுவதில்லை.



பாகுபலில இந்த சீன பாத்துட்டு என் பொண்டாட்டி கேட்டா..."இந்த மாதிரி நான் உங்கமேல நடக்கட்டுமா..."




அது பாகுபலி...நீ நடந்தா நான்பலி அப்படின்னு நினைச்சிகிட்டேன்.

பாகுபலி படத்தில் கட்டப்பாவாக நடித்ததற்காக சத்யராஜின் உருவத்தை லண்டனில் உள்ள பிரபல Madame Tussauds அருங்காட்சியகம் மெழுகு சிலையாக வைத்துள்ளது




தமிழகத்தில் எத்தனையோ சூப்பர் ஸ்டார்கள் இருந்தாலும் இந்த அருங்காட்சியகத்தில் வைக்கப்படும் முதல் தமிழ் நடிகரின் மெழுகு உருவ சிலை இதுவே 👌😍😍👌

பொண்ணுங்க ரக்ஷா பந்தனுக்கு ராக்கி கட்டி நம்மள அண்ணனாக்கும்போது...



நாம ஏன் LOVERS DAY-ல பிடிச்ச பொண்ணுங்களுக்கு தாலி கட்டி பொண்டாட்டி ஆக்கிக்க கூடாது??!

ஏன்டா ஹோம்வொர்க் செய்யல




சார் நான் ஹோம்ல இல்ல... ஹாஸ்ட்டல்ல இருக்கேன்.

ஏன்டா இன்ங்கிரிமென்ட் கம்மியா போட்டனு கேட்டதுக்கு.






இளநீர்லயும்
தண்ணி இருக்கு....
பூமிலயும்
தண்ணி இருக்கு.... .
அதுக்காக,
இளநீர்ல போர் போடவும்
முடியாது ,
பூமில ஸ்ட்ரா போட்டு உரியவும்
முடியாது ..



உன் மனம் வலிக்கும்
போது சிரி ,
பிறர் மனம் வலிக்கும்
போது சிரிக்க வை ..

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## நிஜமும் நிழலும் தெரியாதவர்கள்

20 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில்நுட்பப் புரட்சியால் கிடைத்த ஊடகம்தான் முகநூல். கண்டியில் ஏற்பட்ட கலவரங்களின் எதிரொலியால் சமூகவலைத்தளங்கள் முடக்கப்பட்டன. கலவரங்கள் மேலும் பரவக்கூடாது என்று கருதியே தாம் சமூக வலைத்தளங்களை முடக்கியதாக அரசு அறிவித்தது.

முகநூலைத் தமது வாழ்வில் முக்கியமானதாகக் கருதிக் கொண்டு காலங் கழித்த பலருக்கு வாழ்க்கை சப்பொன்று போனது என்னவோ உண்மைதான். அச்சமயமே பலர் உலகத்தை நிமிர்ந்து பார்த்தனர் என ஒருவர் நகைச்சுவையாகச் சொன்னார். தற்போது முகநூலுக்கு விதிக்கப்பட்ட தடையைத் திறந்து விட்டிருக்கிறது அரசு. பலபேரினது முகநூலைத் திறந்ததும் மடை திறந்த வெள்ளம்போல இடுகைகள் வரத்தொடங்கிவிட்டன.

சமூக வலைத் தளங்களை இளம் வயதினரே அதிகம் பயணபடுத்து கின்றனர் எனக் குற்றஞ்சாட்டுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்ற எம்மவர்க்கு அண்மையில் ஒரு உண்மை புலனாகியிருக்கிறது. அது என்னவெனில் தடை செய்யப்பட்ட முகநூலின் தடையை நீக்குமாறு குத்தி முறிந்தவர்கள் இளவயதினர்களல்லர். அதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கச் சொல்லிப் போர் கொடி தூக்கியவர்களில் முதன்மையானவர்கள் அரசியல்வாதிகள். பெரும் சபைகளில் “பக்கத்திலுள்ளவர் பருப்புக் கேட்கிறார்” என்றதைப்போல, தடையை நீக்குமாறு அரசியல்வாதிகளே மக்களுக்காகப் பரிந்துரை செய்தனர்.

சமூகவலைத் தளங்கை உற்று நோக்கினால் ஒரு உண்மை புலனாகும். தமது பிரசாரங்களுக்காகவும், தம்மை நோக்கி வருகின்ற சாடலுக்கு மறுமொழி கொடுப்பதற்காகவும் முகநூலையும், கீச்சகத்தையும் அதிகம் பயன்படுத்துவது அரசியல்வாதிகளே. பொதுக் கூட்டங்களிலும், பொது நிகழ்வுகளிலும் அலைபேசியை அலையவிடுபவர்கள் அரசியல்வாதிகளும், உயர் அதிகாரிகளுமே. முகநூல்களில் முகம் புதைத்துத் தாம் முக்கியமான தொடர்பில் இருப்பதாகப் பாசாங்கு காட்டுபவர்கள் அவர்களே.

முகநூல் பலரது வாழ்க்கை வரலாற்றையே மாற்றிப் போட்ட கதைகள் பல உண்டு. பல கொலைகள் – கொள்ளைகள் – இழப்புகள் – மன உடைவுகள் – குடும்பச் சச்சரவுகள் – சேர்க்கைகள் – பிரிவுகள் என்று முகநூலினால் ஏற்பட்டவை ஏராளம். இதனூடாக நன்மைகளும் நடந்திருக்கின்றன. போரில் இழந்த தமது பல உறவுகளுடன் முகநூலினூடாகக் கைகோர்த்தவர்கள் பலருண்டு. அதனால் உதவி பெற்று வாழ்வில் மேலெழுந்தவர்களும் அதிகம் உண்டு. திருமணங்களும் அதிகம் நடைபெற்றிருக்கின்றன.

இருந்தும் இத்தகைய சமூக வலைத் தளங்களின் முடக்கலால் 22 கோடி ரூபாவை மேலதிக இலாபமாக அரசு பெற்றிருக்கிறது என ஜனாதிபதி கூறியிருக்கிறார். எனவே சமூக வலைத் தளங்களின் பாவனைகளால் அரசுக்கு ஏற்படும் நஷ்டமானது பல கோடியை எட்டுவதாக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒரு பேரூந்தில் ஏறிப் பார்த்தால் பெரும்பாலும் அனைவருமே ஸ்மாட் போனுடனே முகம் புதைத்துக் கட்டைவிரலால் மேலும் கீழும் தட்டியவாறு பலவிடயங்களைச் சில நிமிடங்களில் கடந்து சென்று விடுகின்றனர்.

எமது வாழ்க்கையில் ‘பவர் கட்”டைப் பாத்திருக்கிறோம். ‘வோட்டர் கட்”டைப் பாத்திருக்கிறோம். பெற்றோல் தட்டுப்பாட்டைப் பாத்திருக்கிறோம். ஆனால் இப்போதுதான் ‘பேஸ்புக் கட”டைப் பாத்திருக்கிறோம். இனிமேல் என்ன என்ன “கட்” வருமோ தெரியவில்லை. பல புதிய விடயங்களை எங்களை அறியாமல் நாம் கற்றுக்கொண்டு விட்ட பிறகு அதை விட முடியாதவர்களாகப் பலர் தள்ளாடுவது தெரிகிறது. எல்லாம் போதையாகி விட்ட பிறகு எது நிழல்? எது நிஜம்? என்று தெரியாதவர்களாகப் பலர் தடுமாறிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

‘யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!’

# எரியும் நினைவுகள்

மதிப்பிற்குரிய நண்பன் அப்துல்காதருக்கு...
வணக்கம்

கண்டிக் கலகத்தால் நீ கதி கலங்கிப் போயிருப்பதை அறிந்து வேதனைப்படத்தான் முடிந்ததே ஒழிய, என்னால் வேறொன்றும் செய்ய முடியாது என்பது உனக்குத் தெரிந்த விடயம். கடந்த பல ஆண்டுகளாக பலவித இன ரீதியான இடர்களைச் சந்தித்த, பல இன ஒடுக்குமுறைக்கும் இனப்படுகொலைக்கும் முகம் கொடுத்த ஒரு சமூக அங்கத்தவன் நான் என்பதுவும் உனக்குத் தெரியும்.

இருந்தும் மானிடன் என்ற வகையில், கண்டியில் நடைபெற்ற இனக் கலவரத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக யாழ்ப்பாண பஸ் தரிப்பு நிலைய முன்றலில் நடைபெற்ற போராட்டத்தை நோக்கி எனது கால்களும் நகரத் தொடங்கியது. பங்கேற்றுக் கொண்டேன். அரசுக்கெதிரான கோஷங்கள் பலவற்றை முன்வைத்துக் கத்திக் குளற முடிந்ததே ஒழிய அதனால் எதுவித பலனும் வரப்போவதில்லை என்றதும் எனக்குத் தெரிந்த விடயம். நட்பு மற்றும் உறவு வட்டங்களில் நடைபெறும் மரண வீடுகளுக்குச் சென்று தமது துயரங்களை எண்ணி குளறிவிட்டு வரும் ஒரு மனித உணர்வே எனக்கு மீதமானது.

உங்கள் இனத்திற்கெதிராகக் கண்டியில் நடைபெற்ற கலவரத்தை முதலில் கேள்விப்பட்டவுடன் என் நினைவுகளும், உணர்வுகளும் என்னை பல ஆண்டுகளுக்குப் பின் நகர்த்தி சென்றுவிட்டன.

அப்போது 1983 ஆடி மாதத்தில் நான் இருந்தேன். கடைகள் எரிக்கப்பட்ட கரும்புகை சூழ்ந்த மருதானை பஞ்சிகாவத்தை நெடுஞ்சாலை வழியாக எனது உயிரைக் கையில் பிடித்தபடி வெள்ளவத்தையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தேன். அந்தப் பகுதியில் அனைத்துக் கடைகளும் எரிந்து கொண்டிருந்தன. றபர் பொருட்கள் எரியும் வேண்டாத வாசனையால் வயிறு குமட்டத் தொடங்கியது. கண்கண் மயங்க என்னால் முன்னே கால் வைத்து நடக்க முடியாவிட்டாலும் அந்த இடத்தில் நான் ஒரு யாழ்ப்பாணத் தமிழன் என்று அடையாளம் காணப்பட்டால் எனக்கு என்ன நடக்கும் என்று அறிந்திருந்தேன். என் மனவலிமைதான் என்னை முன்னோக்கி நகர்த்திக் கொண்டது.

அது வியாபார நடவடிக்கைகளுக்காக கடைகளும், காரியாலயங்களும் திறக்கப்படுகின்ற நேரம். எனவே கடை உரிமையாளர்களில் சிலரும்; சிப்பந்திகளும் வந்திருந்தனர். அவர்களில் பெரும் பாலோனோர் தாக்கப்பட்டுப் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். கடைகள் எரிந்து கொண்டன. எரியாத கடைகள் எரிக்க்ப்பட்டுக் கொண்டிருந்தன. ஒரு பிரபல்யமான புடவைக் கடை எரிக்கப்படாத நிலையில் கொள்ளையடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. சொன்னால் சில வேளைகளில் உனது மனம் நம்பமறுக்கும். ஆனால் அது உண்மை.

கடைகளைக் கொளுத்தியவர்களில் பெரும் பாலோர் தமிழைப் பேசினர். தலையிலே தொப்பி அணிந்திருந்தனர். தாடி வளர்த்திருந்தனர். அந்தப் புடவை நிறுவனத்தில் கொள்ளையடிக்கப்பட்ட புடவைகளை தனியாகவும், கூட்டாகவும் சுமந்து சென்றனர். தமிழருக்கெதிரான இன ஒடுக்கலாக கொழும்பு நகரத்தில் நடைபெற்ற அந்த வன்முறைகளில் சிங்களவர் என்ற போர்வையில் கணிசமான அளவில் உனது சமூகம் பங்கெடுத்துக் கொண்டது. அந்த வன்முறையில் அதிக பயனும், பலனும் பெற்றது உனது மக்களே! இன்றிருக்கின்றதுபோல காணொலிக் கமெராக்கள் இருந்திருந்தால் இன்று கண்டிக் காட்சிகளைப் பார்ப்பதுபோல பல காட்சிகள் மேற்சொன்ன சம்பவங்களுக்குச் சாட்சிகளாக இருந்திருக்கும்.

அதைவிட்டு முன்னோக்கி நகர்ந்து வந்து போராட்ட காலத்துப் பதிவுகளையும் அனுபவங்களையும் எடுத்துப் பார்ப்போமானால் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற பல சம்பவங்களின் பின்னணியில் ஊர்காவல் படையில் இருந்த உனது இனத்தவர்களே அதிகம். உத்தியோகபூர்வ உடைகளுக்குள் நுழைந்து, துப்பாக்கிகளைக் கொண்டு உடும்பன்குளம், அட்டப்பள்ளம், திராய்க்கேணி, வீரமுனை, கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் என ஏராளம்.

காலா காலமாக அம்பாறை மாவட்டத்தில் வசித்து வந்த பல தமிழர்களின் நிலங்களை முஸ்லிம்கள் பறித்து தம் உடைமை ஆக்கியமைக்காகப் பல சாட்சிகள் உண்டு. இன்றும் விடுவிக்கப்படாத அந்த நிலங்களில் இருந்து கொண்டு மேலும் இனச் சுரண்டல்களை நடத்திக் கொண்டிருப்பதோடு, பகிரங்கமாகத் தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்களை அபகரித்துக் கொண்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்குப் பலமாக அவ்வப்போது அரசில் இருக்கும் முஸ்ஸிம் அரசியல்வாதிகளினதும், அரச நிறுவனங்களிலுள்ள முஸ்லிம் அதிகாரிகளினதும் உதவிகளும், ஒத்தாசைகளும் பெறப்பட்டிருந்தன.

அண்மையில் கூட ஓர் இந்து மயானத்தை வலோத்காரமாக ஆக்கிரமிக்கச் சென்றதை 02 படங்களோடும் செய்தியோடும் பகிர்ந்திருந்தது. ஒரு சிறுபான்மை இனம் இன்னொரு சிறுபான்மை இனத்தால் சுரண்டப்படுவதுவும், அவர்கள் சொத்துச் சூறையாடப்படுவதுவும் பாரிய எதிர் விளைவுகளை ஏற்படுத்துகின்ற ஒரு செயற்பாடு என்றதை நீ அறிவாய் என்று நம்புகிறேன். இதை நீ மறுக்க முடியாதபடி அரசாங்கத்தின் முப்படைகளின் அதிகாரி வெளியிட்ட செய்தி ஒன்றையும் பிற்குறிப்பாக இங்கு தருகின்றேன்.

சில தினங்களுக்கு முன்னர் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூட்டுப் படைகளின் பிரதானி ரியல் அட்மிரல் ரவீந்திர விஜய் குணவர்த்தன கண்டிக் கலவரம் பற்றிப் பேசும்போது – “முஸ்லிம் மக்கள் இல்லாவிடில் இந்த நாட்டில் யுத்தத்தை முடித்திருக்க முடியாது. முஸ்லிம் மக்கள் எமக்கு வழங்கிய உளவுத்துறை சார்ந்த மிகப்பெரிய ஒத்துழைப்பின் காரணமாகவே எம்மால் யுத்தத்தை வெற்றி கொள்ள முடிந்தது. எனவே முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து நான் மிகவும் கவலையடைகிறேன்.” – என்று கூறியிருந்தார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாணிடத்தின் ஒன்று கூடலில் பல இலக்கிய மேலாளர்கள் கலந்து கொண்டார்கள். அதிலே கலந்துகொள்ள வந்திருந்த கவிஞர் இன்குலாப் மற்றவர்களைப் பார்த்து” ஏன் வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் புலிகளால் விரட்டப்பட்டனர்” என்று கேட்டாராம். அதற்கு அங்கிருந்த ஒரு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் “ தமிழ் நாட்டில் முஸ்லிம்கள் தமிழர்களாக இருக்கின்றனர். இங்கு முஸ்லிம்கள் வியாபாரிகளாக இருக்கின்றனர்.” எனப் பதிலளித்தாராம். இதை இப்போது கூட்டுப்படைத் தளபதியும் உறுதிப்படுத்தியிருக்கிறார் என்று ஏற்கலாமா?

சிறுபான்மை இனத்தவர்களாக உள்ள நாம் எம்மிடையே புரிந்துணர்வற்று, சுரண்டல்களையும், சூறையாடல்களையும் நடத்திக் கொண்டு எதிரிகளாக எம்மிடையே ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருப்போமானால் எமக்குப் பொதுவான எதிரிகளால் தமிழ் இனத்தைக் காட்டிலும் அதிக எதிர் விளைவைச் சந்திக்கப் போவது முஸ்லிம் இனத்தவர்களாகத்தானிருக்கும் என்பதை நீயும் உனது சமூகமும் இனியாவது ஏற்றுக் கொள்ளுவீர்களா?

அநியாயமும், அக்கிரமும் அதிகரித்தால் ஒரு சுனாமி – சூறாவளி – வெள்ளப்பெருக்குப் போதும். ஒரு மின்னலும் அதனோடு கூடிய இடியும் போதும் என்பதை நான் சொல்லவில்லை. கடந்த கால அனுபவங்கள் கற்றுத் தந்திருக்கின்றன. காலம் பதில் சொல்லும். இது நியதியல்ல – கோட்பாடு.

அன்புடன்
சாமுராய் சத்தியவேலன்

# புதுவிதி + புதுவழி

■ சிக்மலிங்கம் றெஜினோல்ட்

கையில் காசில்லாமல், கடைக்குப் போகாமல், நமக்கென்று எந்தப் பொருட்களையும் வாங்காமல், கிடைப்பதை உண்டு, தரப்படுகின்றதை அல்லது உள்ளதை உடுத்து, ஊர் ஊராகத் திரிந்து, சொல்லப்படுகின்ற பணிகளையெல்லாம் செய்து, மக்களுக்காக மக்களோடு மகிழ்ச்சியாக வாழ்கின்ற வாழ்க்கையைப் பற்றி அறிந்திருக்கிறீர்களா?

அதுவொரு ஆனந்தமான அழகிய வாழ்க்கை. ஆனால், அதைச் சுலபமாக வாழ்ந்து விட முடியாது. ஆசைகளை விலக்கி, மனதை ஒழுங்குபடுத்திக் கட்டுக்குள் வைத்துக் கொண்டு, தியானம் செய்வதைப்போல வாழ்ந்தால் மட்டுமே அதை வாழ முடியும். அப்போதுதான் அதிலுள்ள ஆனந்தத்தை அனுபவிக்க இயலும்.

இப்படியான வாழ்க்கைக்கான பயில்களம் எங்களுக்குக் கிடைத்தது. ஆனால், அதுவொன்றும் இலகுவாகக் கிடைக்கவில்லை. அபாயங்களின் மத்தியிலேயே அதைப் பெற்றோம். குடும்பத்தையே இராணுவத்துக்குப் பலி கொடுக்கக் கூடிய நிலையிலேயே இந்த வாழ்க்கையைத் தொடங்கினோம். போராட்டத்தில் ஈடுபட்ட குடும்பங்களைச் சுற்றி அபாய வலைகள் விரிக்கப்பட்டிருந்த காலம் அது. இயக்கத்துக்குப் போனவர்களைப் பற்றிய தகவல் அறிந்தால், அப்படிப் போனவர்களின் குடும்பங்களைத் தேடிப் படையினர் ஊர்களில் வேட்டையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஆனாலும் குடும்பத்தையும் அபாயத்தையும் யோசித்துக் கொண்டிருந்தால், பொது வாழ்க்கையிலும் போராட்ட வாழ்க்கையிலும் ஓரடி வைக்க முடியாது. ஆடை கசங்காமல், உடல் வியர்க்காமல், எதற்கும் றிஸ்க் எடுக்காமல் பொது வாழ்க்கையிலும் போராட்ட வாழ்க்கையிலும் ஈடுபட முடியுமா? அரசியல் அபிலாஷை களைப் பெற முடியுமா? நாட்டிலும் சமூகத்திலும் மாற்றங்களை உண்டாக்கலாமா? ஆகவே முள்ளின் மேலும் நடக்கத்தான் வேணும். நெருப்புக்குள்ளும் நித்திரை கொள்ளப் பழக வேணும்.

அப்பொழுது எனக்கு 20 வயது. எங்களுடைய அணியில் இருந்த 67 பேரில் ஆறு பேரைத் தவிர, மற்ற எல்லோரும் 25 வயதுக்குட்பட்டவர்கள். மனம் நிரம்பக் கனவுகள் பூத்துக் கொண்டிருக்கும் பருவம் அது. காதலும் காமமும் பொங்கிப் பிரவாகிக்கும் வயது. 'பெட்டை'களின் பின்னால் சுற்றிப் பம்பல் அடிக்கத் தூண்டுகிற இளமை. அந்த இளமைக்குத் தோதாக விதவிதமாக உடுக்க வேணும். வகை வகையாகச் சாப்பிட வேணும். உழைக்க வேண்டும். கையில் நிறையச் சம்பாதிக்க வேணும். நண்பர்களோடு சேர்ந்து கொண்டாடிக் களிக்க வேண்டும். ஊர், உலகம் பார்க்க வேணும் என்ற ஆசைகள் எல்லாம் மனதில் அலைமோதிக் கொண்டிருக்கும்.



இப்படி ஆசைகள் அலைமோதிக் கொண்டிருக்கும் வயதில் எல்லாவற்றையும் துறந்து, கையிலும் பையிலும் காசுமில்லை. போடுவதற்கு நல்லதொரு உடுப்புமில்லை. விரும்பிய மாதிரிச் சாப்பிடுவதற்கு வழியுமில்லை என்ற வாழ்க்கையில் யாராலும் ஒரு மாதம் கூடத் தாக்குப் பிடிக்க முடியுமா? ஆனால், ஆயுள் முழுவதற்கும் அல்லது போராட்டம் முழுவதற்கும் அப்படியான ஒரு வாழ்க்கையை வாழ்வதற்குத் தயாராகினோம்.

வீட்டை விட்டுப்போராட்ட வாழ்க்கைக்கு என்று புறப்பட்டால், சந்நியாசம் மாதிரித்தான், எதையும் எதிர்பார்க்க முடியாது. எல்லாவற்றையும் எதிர்கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ள வேணும். ஏறக்குறைய இதுவொரு துறவே. இந்தத் துறவோடுதான் பயிற்சிக்காகப் படகேறினோம். வீட்டை விட்டு வெளிக்கிட்ட அன்றே தொடங்கியது நெருக்கடிகளும் அலைச்சலும். படகேறும் நாள் வரும்வரையிலும் கடற்கரைக்கு பக்கத்துக் கிராமத்தில் காத்திருப்பு. தங்கியிருக்கும் இடத்தில் தலையை வெளியே காட்ட முடியாது. புதிசாகப் பெடியள் யாரோ வந்து தங்கியிருக்கிறார்கள் என்று யாராவது அறிந்தால், கதை அவ்வளவுதான்.

அந்த இடத்தைப் படையினர் சுற்றி வளைத்துப் பாதுகாப்பும் சாப்பாடும் தந்த குடும்பத்தையே கொன்று விடுவார்கள். எல்லோரும் இப்படிக் காட்டிக் கொடுப்பதில்லை என்றாலும் ,எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்கிறது என்று எப்படித் தெரியும்? நாங்கள்தான் எச்சரிக்கையாக இருக்க வேணும். இதில் ஒருவாறு சமாளித்துக் கொண்டு படகேறுவதற்காகக் கடற்கரைக்குப் போகவேணும். கடற்கரைக்குப் போகும்போதும் எச்சரிக்கையோடுதான் நகர முடியும். கடற்கரையில் நிலைமை பிழையென்றால், கடற் பயணம் பாழாகி விடும். அப்படி எத்தனையோ படகுகளும் பயிற்சிக்குப் போனவர்களும் நடுக்கடலில் வைத்துக் கடற்படையினால் அழிக்கப்பட்ட கதைகள் ஏராளமுண்டு.

நாங்கள் படகேறிய அன்று முழுநிலவுக் காலம். கடல் தழும்பிக் கிடந்தது. அலைகள் ஏராளம் கதைகளைச் சொல்லத் துடித்ததைப்போல ஒருணர்வு. படகில் இருந்த அத்தனைபேருக்கும் ஊரை விட்டு, குடும்பத்தை விட்டு இப்படியொரு பயணம் போகிறோம் என்ற எண்ணம் ஒரு வகையில் கவலையாகவே இருந்தது. ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. எனக்கு நெஞ்சுக்குள்ளே எதுவோ அடைப்பதைப்போல இந்த எண்ணங்கள் பாரமாகிக் கிடந்தன. எப்படி இந்தப் படகு இந்தளவு மனப் பாரத்தோடு நீரில் மிதந்து கொண்டிருக்கிறது என்று ஆச்சரியப்பட்டேன்.


ஒருவாறு கடற்பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு தமிழ்நாட்டில் காலடி வைத்தால், அங்கிருந்து பயிற்சிக்குக் கொண்டு போவதற்குள் ஆயிரம் பிரச்சினைகளும் பல்லாயிரம் நெருக்கடிகளும். அதையெல்லாம் எப்படிச் சமாளித்துக் கடந்தோம் என்பதை நினைத்தால், ஏதோ யுக வெற்றியைப் பெற்றதைப் போலிருக்கிறது இப்போது. பயிற்சிக்கு முகாமுக்குப் போன அன்றே வாழ்க்கை வேறாகியிருந்ததை முற்றாக உணர்ந்தேன். அளவுச் சாப்பாடு. கடினப் பயிற்சி. ஏராளம் விதிமுறைகள். ஓய்வில்லாத வேலை. குறைந்த ஓய்வு. சக தோழர்களுக்காக விட்டுக்கொடுப்பு. கொள்கைக்காகவே கடினமானவற்றையும் ஏற்றுக்கொள்ளல். சேர்ந்து பணியாற்றுதல். மற்றவர்களுக்காகவே வாழ வேண்டுமென்ற கருத்தூன்றல். எதுவும் தனிப்பட்டதில்லை. யாருக்கும் சொந்தமானதில்லை. ஏன் இந்த உயிரும் உடலுமே நமக்குரியதில்லை என்ற விதிப்புரை. உலக வரலாறு, மானுட வரலாறு, போராட்டங்களின் வரலாறு என்ற கற்கை.

பயிற்சி முகாம் வாழ்க்கை தொடக்கத்தில் கடினமாக இருந்தாலும் நாட்செல்ல அதுவே பழக்கமாகி, இயைபாகியது. பயிற்சி முடிந்து வெளியே வந்தபிறகு மனம் படிந்து அமைதியானது. சனங்களைத் தவிர வேறு எதுவுமே பெரிதில்லை. சனங்களுக்காகவே எதையும் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் விருப்பமுமே மனதில் நிரம்பியிருந்தது.

(18ஆம் பக்கம் பார்க்க)



# எங்கே அடிபட்டாலும் காலைத் தூக்கும்... தமிழரசுக் கட்சி



■ பகலவன்

கீறிட்ட இடத்தை நிரப்பினால் அந்த உயிரினம் கோபித்துக் கொள்ளும். அவர்களைப் போல நன்றியில்லாதவர்களா நாங்கள்? என்று, தமிழ்த் தேசியத்தை வளர்த்தெடுப்பதில் புலிகளின் தியாகமும், பங்களிப்பும் விவரிக்காமலே மக்களுக்குத் தெரிந்த விடயம். அதை விளங்காததுபோல் நடிப்பதுதான் கூட்டமைப்பில் புகுந்துகொண்ட சிலர் சொல்லிக்கொள்ளும் இராஜதந்திரம், அரசாங்க புள்ளிவிவரங்கள் படி தமிழரசுக் கட்சி 2015 ஆண்டு தேர்தலில் பெற்ற வாக்குகள் 5,15,963. தற்போதைய உள்ளூராட்சித் தேர்தலில் பெற்றதோ 3,39,675 வாக்குகள். அதாவது 34 சதவீத வாக்கு வீழ்ச்சி. இதற்கான காரணத்தைக் கண்டறிந்து தமது தவறுகளைக் திருத்திக் கொள்ள இவர்கள் முயற்சிப்பதாகத் தெரியவில்லை. தமது கோபத்தைத் தீர்த்துக்கொள்ள அனந்தியைக் கட்சியிலிருந்து நீக்கித் திருப்தி கண்டுள்ளார் தமிழரசுக் கட்சிச் செயலர்.

"வடக்கு முதல்வரை பதவியிலிருந்து நீக்க வேண்டும்" அதற்காக அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரவேண்டும் என தமிழரசுக் கட்சியின் செயற்குழுவில் தீர்மானம் எடுக்கவில்லை. தமிழரசுக் கட்சியும் நீங்கள் வடக்கு முதல்வராகப் பொறுப்பெடுக்க வேண்டும் என்ற கருத்துப்பட அரசியலில் ஈடுபடவேண்டும் என எழுத்து மூலம் சி.வீ.விக்னேஸ்வரனைக் கேட்டுக்கொண்டது. அவ்வாறிருக்கையில் கட்சித் தீர்மானத்துக்கு மாறாக முதல்வரை அகற்றச் சதி செய்த சுமந்திரன் மீதுதான் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். கட்சித் தீர்மானத்துக்கு விரோதமாக செயற்பட்டீர்கள் என சுமந்திரனுக்கோ, ஆர்னோல்ட்டுக்கோ, சயந்தனுக்கோ இவ்வாறான கடிதம் செயலரால் அனுப்பப்படவில்லை.

இன்று அனந்தியைக் கட்சி விரோத நடவடிக்கைக்காக கட்சியிலிருந்து நீக்கியுள்ளது தமிழரசுக் கட்சி. ஒற்றைக் கண் சோல்பரிப் பிரபு பரிந்துரைத்த அரசியலமைப்பை ஆதரித்தமையால்தானோ என்னவோ இலங்கையில் ஓர் இனத்தின் மீது மட்டும் அரசின் பார்வை இருந்தது. இன்று கட்சிகளும் அதே நிலைப்பாட்டில் உள்ளன. புலிகளை ஓரம்கட்டுவது என்பதை ஒரே கொள்கையாகவே கொண்டுள்ளன கூட்டமைப்பில் உள்ள சில கட்சிகள். மக்களுடனான நெருக்கம் இவர்களுக்கு இல்லாததினாலேயே அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளமுடியாமல் உள்ளது .

யாழ். மாநகர சபை 6 ஆம் வட்டாரத்தில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. மோகனதாஸ் போட்டியிட்டார். அவர் இந்தத் தேர்தலில் தோல்வியுற்றார். இது சம்பந்தமாக அந்த வட்டாரத்தில் இருந்த ஒருவரிடம் கருத்துக் கேட்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார். "மோகனதாஸ் அவர்களை நாங்கள் மதிக்கிறோம். ஒரு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடக்கூடிய தகுதியிருந்தும் இதில் போட்டியிடுகிறாரே எனக் கருதினோம் எனினும் இத் தேர்தலின் பின் அவரது கல்வித்தகைமை, பல்துறை ஆற்றல் என்பனவற்றைக் குறிப்பிட்டு இவரை நகர பிதாவாக ஆக்குங்கள் என அரியாலையிலுள்ள அனைத்துச் சனசமூக நிலையங்களூடாகவும், மக்களின் கையெழுத்து மூலமாகவும் கட்சியைக் கோருவதெனத் தீர்மானித்திருந்தோம். ஆனால், தேர்தலுக்கு முன்னதாகவே ஆர்னோல்ட்தான் மேயர் என சுமந்திரன் அறிவித்தார். கட்சித் தலைவரும், செயலரும் அவ்வாறு தீர்மானமெடுக்கவில்லை என அறிவித்த பின்னரும் மீண்டும் அவர் தனது முடிவே தீர்மானம் என்றார்.

நாங்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுத்த முதல்வரை அகற்றத் துடித்த சதிகாரனின் கீழ் மோகனதாஸ் ஐயா ஒரு உறுப்பினராகக் கூனிக் குறுகி நிற்பதா எனக் கோபப்பட்டு அந்த நிலையைத் தவிர்க்கவே விரும்பினோம். தமிழரசைத் தோற்கக்கூடிய கட்சியென்ற வகையிலேயே காங்கிரஸூக்கு நாம் வாக்களித்தோம். மற்றப்படி நாங்கள் யாரும் காங்கிரஸ்காரர்கள் அல்லர். இப்போதும்தான் சொல்கிறோம் மோகனதாஸ் ஐயாவை விட வெற்றி பெற்ற இளைஞர் மேம்பட்டவரல்லர். மீண்டும் சொல்கிறோம் எங்களது அதிருப்தியைக் காட்ட வாக்குச் சீட்டை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தினோமே தவிர தனிப்பட்ட முறையில் மோகனதாஸ் ஐயாவை நாங்கள் மதிக்கிறோம்."

மட்டக்களப்பில் ஈரலிக்குளம் என்னுமொரு இடமுண்டு. ஈரலிக்குளம் பெரியவட்டுவான் பகுதி தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்றுடன் மிகவும் தொடர்புபட்டது. அதன் ஆணி வேருடன் சம்பந்தப்பட்டது. முதன் முதல் போராளிகளுக்கான பயிற்சிமுகாம் அமைக்கப்பட்டது இப்பகுதியில்தான். ஆரம்பத்தில் வாடிகளில் ஆயுதங்களுடன் போராளிகள் தங்கினர். போராளிகள் அனைவரையும் தங்கள் பிள்ளைகள்போல் நேசித்தனர் அப்பகுதி மக்கள். உணவுப்பொருட்கள் கொண்டு வருவது உட்பட மருத்துவம் தேவைப்படும் போராளிகளைக் கொண்டு செல்வது மற்றும் சகல தேவைகளையும் அவர்களே கவனித்தனர்.

முதலாவது பயிற்சி முகாம் மீது படையினர் முற்றுகை உலங்கு வானூர்திகளின் துணையுடன் மேற்கொள்ளப்பட்டது. அங்கிருந்த போராளிகள் துணிச்சலுடன் அதை முறியடித்த விதம் அப்பகுதி மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது கண்கூடாகப் பார்த்த விடயமல்லவா அது? இலங்கை இராணுவம் மட்டுமல்ல இந்தியப் படையினரும் இந்தப் பகுதி மக்கள் மீது கோபமாகவே இருந்தனர். தமது தடைகளை மீறிப் போராளிகளுக்கு உதவுகின்றனர் என்று. இதனால் அப்பகுதி மக்கள் பட்ட அவலங்களைத் தனியாகப் புத்தகமாக்கலாம் .

பல இளைஞர்கள் இப்பகுதியில் இருந்து போராட்டத்தில் இணைந்து கொண்டனர் இப்படியான வரலாற்றைக் கொண்ட ஈரலிக்குளம் பகுதியிலிருந்து கடந்த உள்ளூ ராட்சித் தேர்தலில் ஒருவரை வேட்பாளராக நியமிக்கும் படி கட்சித் செயலரை வேண்டினர். கடந்த மாகாணசபைத் தேர்தலில் செயலர் துரைராஜசிங்கத்தின் வெற்றிக்கு தாங்கள் செய்த பங்களிப்பை மறந்திருக்கமாட்டார் என நம்பினர். பாதகம் பல புரிந்த - ராசிக் குழுவில் அங்கம் வகித்த - இராணுவத் துணைக்குழுவில் கணிசமான காலம் சம்பளம் பெற்ற இரா. துரைரத்தினம் தங்களுடைய கூட்டிலிருந்து விலகிச் சென்றமை தான் கவலை அளிக்கிறது எனக் கூறிய பிரமுகர்கள் ஈரலிக்குள மக்களை கிள்ளுக் கீரையாக நினைத்தனர். எனவே தமிழரசுக் கட்சிக்கு பாடம் புகட்டத் தீர்மானித்தனர் அப்பகுதி மக்கள். எப்படித்தான் தலையில் மிளகாய் அரைத்தாலும் - எந்தக் கழுதையை போட்டாலும் தலைவர் உருவாக்கிய கட்சிக்குத்தான் வாக்களிப்போம் என்று கூறிய ஆரையம்பதி மக்களைப் போல தாங்கள் இருக்கப்போவதில்லை எனத் தீர்மானித்தனர்.

மாவீரர் கப்டன் வசந்தின் சகோதரரை கைச் சின்னத்தில் போட்டியிட வைத்தனர். அவர் வென்றார். இதைத் தமிழ்த் தேசியத்தின் தோல்வியாக அவர்கள் கருதவில்லை. இரா. துரைரத்தினம் போன்றோரைச் சேர்த்த போதே தமிழ்த் தேசியத்தின் கழுத்தில் சுருக்குப் போட்டாயிற்று. இனி என்ன நடந்தால் என்னவென்று முடிவெடுத்தனர். ஏறாவூர் பிரதேச சபையில் தமிழரசுக்கட்சி மூன்றாவது இடத்தையே பிடிக்க முடிந்தது. ஈரலிக்குளம், தன்னாமுனை , ஆறுமுகத்தான் குடியிருப்பு , உட்பட எட்டு வட்டாரங்களில் வெற்றி பெற்றது சுதந்திரக் கட்சி. இங்கு பிள்ளையான் கட்சிக்கு 6 இடங்களும் தமிழரசுக் கட்சிக்கு 6 இடங்களும் கிடைத்தன. இதற்கு மக்களைக் குற்றம்சாட்டிப் பயனில்லை. ஒரு சிலரின் புலி எதிர்ப்பு மேலாதிக்க சிந்தனை அவர்களின் கட்சியையே மக்களிடமிருந்து அந்நியப்படுத்துகிறது என்பதுதான் உண்மை.

## ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

- வல்வை ரவி -

தொடர் 28

# வேலணை



வட இலங்கையின் சிறுசிறு சிரசுகள் போல் காணப்படுகின்ற தீவுகளுள் யாழ்ப்பாண மாவட்டத்தின் தெற்கேயுள்ள வேலணைத் தீவும் ஒன்றாகும். இத்தீவிலுள்ள ஒரு கிராமமே வேலணையாகும். யாழ்ப்பாணத்திலிருந்து தீவுகளைத் தொடுத்துச் செல்லும் சாலையின் மூலம் வேலணைத் தீவு குடாநாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்காகவுள்ள வேலணைத் தீவில் வடக்கில் சரவணைக்குக் கிழக்கில் மண்கும்பானுக்கு இடையில் ஏறத்தாழ 15 சதுர கிலோமீற்றர் பரப்புடையது வேலணை. இது “லைடன்தீவு” எனவும் வழங்கப்படும். நான்கு மைல் நீளமும் மூன்று மைல் அகலமும் கொண்ட இத் தீவின் உட் பகுதிகளாக அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, சரவணை, நாரந்தனை, கரம்பொன், சுருவில், ஊர்காவற்றுறை ஆகியன அமைந்துள்ளன.

இவ்வூர் வேலணை என அழைக்கப்படக் காரணம், வேல்+அணை=வேலணை, “வேல் அணைந்த இடம்” என்றும் முருக வழிபாடு இந்தக் கிராமங்களிடம் முதன்மை பெற்றிருந்ததால் “வேலன் இணைந்த இடம்” என்றும் பின்னாட்களில் மருவி வேலணை ஆனது. மேலும், செருத்தனை, சிற்பனை முருகமூர்த்தி கோயில், சோழாவத்தை முருக மூர்த்தி கோயில், வங்காளவடி முருகன் கோயில் என்பனவும் இப் பகுதியில் முருக வழிபாடு (வேல் வழிபாடு) முதன்மை பெற்றிருத்தலையும், அதனால் முருக வழிபாட்டுடன் தொடர்புடையதாக இடப்பெயர்கள் ஆக்கம் பெற்று வழ்ங்கி வந்திருந்தமையையும் அவதானிக்க முடிகின்றது.

பண்டைய காலத்தில் வேலன் என்ற பெயருடைய ஒரு தலைவனின் பொறுப்பில் வேலணையூர் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு வேலனால் நிர்வகிக்கப்பட்டு வந்தமையால் இப்பெயர் இவ்வூருக்குப் ப்திவாயிற்று. அத்துடன் கடம்பன் என்ற கடற்கொள்ளையனை அடக்குவதற்காக வேலன் என்ற சங்க கால தென்நாட்டு' இளவரசன் வந்து தரையிறங்கிய இடம் வேலணை என்றும்- “வெண்ணிலவும் பெண்ணரசி” என்ற நூலில் மி.ப. சோமு குறிப்பிட்டுள்ளார்.


வரலாற்று ரீதியாக வேலணைக் கிராமத்தின் குடிசன வளர்ச்சியில் இக்கிராமம் யாழ்ப்பாண இராச்சிய காலத்திலேயே முக்கியம் பெற்று விளங்கியது. போர்த்துக்கேயர் ஆட்சியில் இக் கிராமத்துக்கு அருகாமையில் அமைந்திருந்த ஊர்காவற்றுறை, கரம்பொன், நாரந்தனை போன்ற கிராமங்களில் வாழ்ந்த மக்கள் பலர் கத்தோலிக்க மதத்தைத் தழுவியபோது வேலணை மக்கள் இந்து நெறியை நழுவ விடவில்லை.


அடுத்து வந்த ஒல்லாந்தரது ஆட்சியில் இக் கிராமத்தில் மாற்றங்கள் நிகழ்ந்தமைக்கான வரலாறு இல்லை. ஆயினும், ஆங்கிலேயரது 1860 - 1875 வரையான காலத்தில் யாழ். குடாநாட்டில் தோன்றிய வாந்திபேதி நோயால் வேலணைக் கிராம மக்களும் பாதிக்கப்பட்டு இறந்தனர் எனக் குறிப்புகள் உண்டு. இங்கு போர்த்துக்கேயரால் அல்லது ஒல்லாந்தரால் கட்டப்பட்ட ஒரு பெரிய கோபுரம் 1832ஆம் ஆண்டு வரை இருந்ததாகவும் பின்பு அது அழிந்து மணல் மேடாகக் காட்சி தருவதாகவும் கூறப்படுகின்றது.

தமிழர்கள் வழிபட்டு வரும் கோயில்களில் மிகப் புரதானமானவற்றில் வேலணை கிழக்கிலுள்ள பெருங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவிலும் ஒன்று. ஒல்லாந்தர் காலத்துப் பழைமையான பத்திரங்களிலிருந்து தொகுக்கப்பட்டு ஆங்கிலேய ரினால் சேமித்து வைத்திருக்கும் அரசாங்கக் கச்சேரிப் பதிவேடுகளிலே இக் கோயில் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. மேலும், பண்டு தொட்டு இக் கோயிலிலே மிருக பலி இடப்பட்டு வழிபடும் வழக்கம் இருந்ததாக அரசாங்கக் கச்சேரிப் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

விவசாயத் தொழிலுக்குப் பெயர்பெற்ற பிரதேசமாகவும் வேலணை விளங்கி வந்துள்ளது. அதேவேளை வியாபார நடவடிக்கைகளும் இடம்பெற்று வருவதைக் காணலாம். இவ்வாறாக தமிழர் தேசத்து மண் வாசனை கமழும் தேசமாக வேலணை மண் மண்வாசனை வீசி வருகிறது.







# வாரப்பலன்

### மேடம்
குடும்பப் பணத்தேவை அதிகரிக்கும். புத்திரர் படிப்பில் முன்னேறுவர். குடும்ப மகிழ்ச்சி கூடும். வியாபாரத்தில் உழைப்பால் ஆதாயம் பெருகும். வாகனத்தில் அதிக வேகம் வேண்டாம். பணியாளர்கள் நன்மதிப்பை பெறுவர்.

### ரிஷபம்
வெளியூர் பயணம் வெற்றிதரும். புத்திரர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வர். பூர்வீகச் சொத்தால், பணவரவு கூடும். பகைவரால் உருவான தொந்தரவு விலகும். மனைவியின் தியாகத்தைப் பாராட்டுவீர்கள்.

### மிதுனம்
தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு தடைகளை முறியடிப்பீர்கள். ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதைத் தவிர்க்கவும். மனைவியின் உடல் நலத்துக்குச் சிகிச்சை தேவைப்படலாம். வியாபாரத்தில் விற்பனை அதிகரிப்பால் லாபம் உயரும்.

### கடகம்
மனதில் உற்சாகம் பிறக்கும். அன்றாட பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். புத்திரரின் நற்செயல் பெருமை தேடித் தரும். உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும். வாழ்வியல் நடைமுறை சுமுகமாக அமையும்.

### சிம்மம்
சமூகத்தில் மதிப்பு மிக்கவராகத் திகழ்வீர்கள். தாய்வழி உறவினர்களின் செயற்பாட்டை குறை சொல்ல வேண்டாம். புத்திரர் படிப்பில் முன்னேற உதவுவீர்கள். பூர்வீகச் சொத்துப் பராமரிப்பில் நம்பகமானவர்களை பணியமர்த்தவும்.

### கன்னி
வாகனத்தின் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் செயற்பாடு சிறப்புற அமையும். மனைவியிடம் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். வியாபாரத்தில் உள்ள அனுகூலங்களைத் தவறாமல் பாதுகாக்கவும்.

### துலாம்
பணிகளில் திறமை வெளிப்படும். உடன் பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். தாய்வழி உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலைக்கும். புத்திரர் படிப்பில் முன்னேற்றம் காண்பர். மங்கல நிகழ்ச்சியில் அடிக்கடி கலந்து கொள்வீர்கள்.

### விருச்சிகம்
அறிமுகம் இல்லாதவர்களிடம் நிதானித்து பேச வேண்டும். புத்திரர் உங்களின் ஆலோசனையை மதித்துச் செயற்படுவர். தொழிலில் சீரான லாபம் கிடைக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்கக் கூடாது.

### தனுசு
எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். புத்திரரை நல் வழி நடத்துவதில் இதமான அணுகுமுறையை பின்பற்றவும். கடனில் ஒருபகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் செயல்கள் நல்ல விதமாக அமைந்து, வீட்டுக்கு பெருமையைத் தேடித் தரும்.

### மகரம்
புத்திரரின் நீண்டநாள் தேவையை நிறைவேற்றி மகிழ்வீர்கள். ஆரோக்கியத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். நிலுவைப்பணம் வசூலாகும். பெண்கள் இஷ்டதெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் முன்னேற கூடுதல் முயற்சி அவசியம்.

### கும்பம்
வெளியூர் பயணத்தால் நன்மை காண்பீர்கள். புத்திரரின் வேலைவாய்ப்பில் முன்னேற்றம் ஏற்படும். மனைவி கூடுதல் அன்பை வெளிப்படுத்துவர். விருந்து விழாவில் மகிழ்ச்சியுடன் கலந்து கொள்வீர்கள்.

### மீனம்
உடன் பிறந்தவர்களால் உதவி கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருட்களைத் தாராள பணச்செலவில் வாங்கித் தருவீர்கள். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள். வியாபாரம் செழிக்கும்.


இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'சுதந்திரன்' 35 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் 'புதிய சுதந்திரன்' என்ற பெயருடன் வெளிவரத் தொடங்கியிருக்கிறது. அதன் வெளியீட்டு நிகழ்வு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது.


அண்மையில் சுவிஸ் நாட்டின் உயர் ஸ்தானிகர் கிளிநொச்சிக்கு பயணம் செய்து காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகளைச் சந்தித்தார்.


கிழக்கு மாகாணத் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பச் சம்மேளனத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 13ஆம் திகதி நடைபெற்றது.


முழங்காவிலில் வசிக்கும் மாற்றுத்திறனாளியான முன்னாள் போராளி ஒருவருக்கு சுமிலோமில்சன் வாழ்வாதார உதவியை வழங்கினார்.


காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் சர்வதேசத்தின் தலையீட்டைக் கோருமாறு அவர்களது உறவினர்கள் அமைச்சர் அனந்தி சசிதரனைச் சந்தித்தனர்.


யாழ்.புங்குடுதீவில் தொடர்ச்சியாகக் கால் நடைகள் கடத்தப்படுவதைக் கண்டித்து ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையம் முன்பாக மக்கள் கவனயீர்ப் புப் போராட்டத்தை நடத்தினர்.


யாழ்ப்பாணம் சமூக செயற்பாட்டு மையம் JSAC கடந்த 12 ஆம் திகதி நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடத்திய மகளிர் தின நிகழ்வின் பதிவு.

# கற்பனைக் காதலி




ஒரு தடவை முல்லா நசுருதீனிடம் அவருடைய நண்பன் கிண்டலாக , " நசுருதீன், உன்னுடைய மனைவி, இரவில் தன்னுடைய காதலனுடன் உன்னுடைய மாந்தோப்பில் காதல் புரிந்து கொண்டிருக்கிறாள்" என்று சொன்னான். முல்லா கம்பீரமானார். " எப்போது அவள் வருகிறாள் ? " என்று கேட்டார்.

“இங்கு ஏறத்தாழ இரவு ஒருமணிக்கு” என்றான் அவன். அந்த நாள் நசுருதீனின் பொழுது மன அமைதியற்றுக் கழிந்தது. இரவு உணவுகூட சாப்பிடவில்லை. இரவு பத்து மணி அடித்தது. தனது துப்பாக்கியை எடுத்துக் கொண்டு தோட்டத்துக்கு சென்று ஒரு மரத்தின் மறைவில் உட்கார்ந்து கொண்டார். " இன்று அவர்கள் இருவரையும் தீர்த்துக் கட்டுவது" என்று முடிவு செய்திருந்தார்.

நேரம் போய்க் கொண்டே இருந்தது... அவரது மனைவியும் வரவில்லை. அவளது காதலனும் வரவில்லை. இரவின் அமைதியில் ஒரு மணி அடித்தது. அப்போதுதான் அவருக்கு நினைவு வந்தது. “தனக்கு திருமணம் ஆகவில்லை” என்பது.

# கேள்விக்கு என்ன பதில் ?

1. ஒரு தேனீயால் எத்தனை முறை கொட்டமுடியும்?
2. முகப்பவுடரைக் கண்டுபிடித்த நாடு எது?
3. கிரிக்கெட் விளையாட்டு எங்கே தோன்றியது?
4. மெர்கூரி விளக்குகள் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு எது?
5. கழுதைப் பந்தயம் நடக்கும் இந்திய மாநிலம் எது?
6. மரதன் ஓட்டப் பந்தயம் எத்தனை மைல் தூரத்தைக் கொண்டது?
7. நைஜீரியா நாட்டில் எத்தனை மொழிகள் உள்ளன?
8. சிப்பியில் முத்து விளைய எத்தனை ஆண்டுகள் எடுக்கும்?






### விடைகள்

1) ஒரேயொரு முறை
2) இத்தாலி
3) இங்கிலாந்து
4) 1912 இல.
5) ராஜஸ்தான்
6) 26மைல்
7) 420 மொழிகள்
8) 15ஆண்டுகள்

## காலத்தால் அழிந்துவிட்ட பழந்தமிழர் அளவைகள்

### கால அளவுகள்

இருபத்தி நான்கு நிமிடங்கள் = ஒரு நாழிகை.
இரண்டரை நாழிகை = ஒரு மணி.
மூன்றே முக்கால் நாழிகை = ஒரு முகூர்த்தம்.
அறுபது நாழிகை = ஒரு நாள்.
ஏழரை நாழிகை = ஒரு சாமம்.
ஒரு சாமம் = மூன்று மணி.
எட்டு சாமம் = ஒரு நாள்.
நான்கு சாமம் = ஒரு பொழுது.
இரண்டு பொழுது = ஒரு நாள்.
பதினைந்து நாள் = ஒரு பக்கம்.
இரண்டு பக்கம் = ஒரு மாதம்.
ஆறு மாதம் = ஒரு அயனம்.
இரண்டு அயனம் = ஒரு ஆண்டு.
அறுபது ஆண்டு = ஒரு வட்டம்.



# அறிந்து கொள்வோமே



### மக்கள் தொகை

உலக மக்கள் தொகை தினம் ஜூலை 11 இல் கொண்டாடப்படுகிறது. உலக மக்கள் தொகை 1840இல் 100 கோடியை எட்டியது. உலக மக்கள் தொகை 1927இல் 200 கோடியை எட்டியது. உலக மக்கள் தொகை 1960இல் 300 கோடியை எட்டியது. உலக மக்கள் தொகை 1987இல் 500 கோடியை எட்டியது. உலக மக்கள் தொகை 1999இல் 600 கோடியை. எட்டியது. உலக மக்கள் தொகை 2011இல் 700 கோடியை எட்டியது. உலக மக்கள் தொகையில் சீனாவே இன்று முதல் நிற்கின்றது.

### ஐ.நா. சபை

ஐக்கிய நாடுகள் சபை என்பதே ஐ.நா.சபையின் முழுப்பெயராகும். இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் உலக அமைதி , பாதுகாப்பு போன்றவற்றை உருவாக்க உலக நாடுகள் தமக்குள் ஏற்படுத்திக்கொண்டதுதான் ஐ.நா.சபை. இதன் முதல் கூட்டம் 1946இல், இலண்டன் நகரில், இடம்பெற்றது. இந்தச் சபை 6 உள்ளமைப்புகளைக் கொண்டது . பொதுச்சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதார,சமூகச் சபை , பொறுப்பாண்மைக் குழு, பன்னாட்டு நீதிமன்றம், செயலகம் என்பனவே இந்த ஆறு உள்ளமைப்புகளாகும். ஐ.நா.பொதுச்சபை நியூயோர்க்கில் உள்ளது. இந்த பொதுச்சபை வருடத்துக்கு இரு தடவை கூடுகின்றது.



# பாவிகளுக்காக உயிர்துறந்த இயேசுபிரான்

சில நூறு ஆண்டுகளுக்கு முன் "அல்போன்சோ" என்ற அரசர் ஸ்பெயின் நாட்டை ஆண்டு வந்தார். நீதி தவறாமல் பொற்கால ஆட்சியை மக்களுக்கு வழங்கியதால், இன்றைக்கும் அவர் மக்களால் நினைவு கூரப்படுகிறார்.

அல்போன்சோ ஆட்சியில் ஸ்பெயின் மீது எதிரி நாட்டுப் படையினர் படையெடுத்து வந்தனர். இரு தரப்பினருக்கும் இடையே பயங்கரச் சண்டை நடந்தது. எதிரி தரப்பில் சிலர் மாறுவேடத்தில் ஸ்பெயின்



நாட்டுக்குள் புகுந்து, இளவரசரைக் கடத்திச் சென்று விட்டனர். இளவரசர் கடத்தப்பட்ட செய்தியைக் கேட்டு மன்னர் மனமுடைந்துபோனார்.

இந்தச் சம்பவம் நடந்த சில நாள்கள் கழித்து, எதிரி நாட்டு அரசரிடமிருந்து மன்னருக்கு ஓர் ஓலை வந்தது. அந்த ஓலையில், "உனக்கு உன்னுடைய மகன் வேண்டுமா... இல்லை, உன் தேசத்து மக்கள் வேண்டுமா? மகன் வேண்டுமென்றால், நாங்கள் நாட்டின்மீது படையெடுத்து வந்து, மக்களைக் கொன்றொழிப்போம். மக்கள்தான் வேண்டும் என்றால், உன்னுடைய மகனைக் கொன்றொழிப்போம்" என்று எழுதி அனுப்பியிருந்தனர்.

அந்த ஓலையைப் படித்ததும், எதற்குமே அஞ்சாத மன்னர் அதிர்ந்து போனார். மன்னரைச் சுற்றி அரச சபையினர் இருந்தனர். மன்னர் என்ன முடிவெடுக்கப் போகிறாரோ என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர். அப்போது மன்னர் அரச சபையிலிருந்த எழுத்தரை தன் அருகே அழைத்து, அவரிடம் "என்னுடைய மகனை நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால், என் நாட்டு மக்களை நீங்கள் ஒன்றும் செய்யாதீர்கள்" என்று எழுதுமாறு கேட்டுக்கொண்டார்.

எழுத்தரும் மன்னர் சொன்னபடியே ஓலையை எழுதி, அதனை எதிரி நாட்டு அரசனுக்கு அனுப்பிவைத்தார். மன்னர் எடுத்த இந்த முடிவை அறிந்து, அரச சபையினர் மட்டுமல்லாமல், நாட்டு மக்கள் அனைவருமே திகைத்துப் போனார்கள். மக்களுக்காக தன் மகனையே கையளித்த மன்னர் அல்போன்சோவின் தியாகச் செயல் அனைவரையும் வியக்க வைப்பதாக இருக்கிறது.

எப்படி மன்னர் அல்போன்சோ மக்களுக்காக தன்னுடைய மகனையே கையளித்தாரோ, அதுபோன்று பிதா என அழைக்கப்படும் கடவுளும் தன் ஒரே மகன் இயேசு கிறிஸ்துவை நமக்காக, நம்முடைய மீட்புக்காகக் கையளித்து "பேரன்பின் ஊற்று" என்பதை நமக்கு நிரூபித்துக் காட்டுகின்றார்.

# இறைவனைத் தேடிய பெண்

"இந்த உலகில் எனக்கு வேறெதுவும் தேவையில்லை... இறைவன் போதும்" என்ற எண்ணம்... காதலால் கசிந்துருகி இறையோடு ஒன்றிப்



போகும் மனம் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை.

சராசரி வாழ்க்கையில் தெய்வத்தைக் கோயிலில் சென்று வணங்குவது, பண்டிகைகளைக் கொண்டாடுவது, விழாக்கள் நடத்துவது... என பக்திக்கும் எல்லைகளை வகுத்து வைத்திருக்கும் எளிய மனிதர்கள் நாம். எல்லாவற்றையும் துறந்து இறைவனைத் தேடும் பயணமும், அதில் சித்தியும் சிலருக்குத்தான் வாய்க்கிறது. அவர்களிலும் பெண்களின் எண்ணிக்கை, விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்கு மிகக்குறைவு. காரைக்கால் அம்மையார், ஆண்டாள்... என உதாரணங்களையேகூட தேடித் தேடித்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்த வகையில் வட இந்தியாவில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மீராபாய் முக்கியத்துவம் பெறுகிறார்.

நெஞ்சை உருக்கும் தன் பஜனைப் பாடல்களால் அந்தக் கிரிதர கோபாலனோடு ஐக்கியமாகி விட்டவர், "மீரா", "பக்த மீரா' என்றெல்லாம் அழைக்கப்படும் மீராபாய். அரச குடும்பத்தில் பிறந்தாலும் வாழ்க்கை முழுக்கவே போராட்டம். இவரை, "பித்துப்பிடித்தவர்' என்றார்கள் மக்கள். "குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு' என்றார் மாமியார் "நீ வேண்டாம்" என உதறித்தள்ளுகிறான் சகோதரன்.

விஷம் கலந்த பாலைக் கொடுத்தனுப்புகிறார் ராணா... அந்தப் பாலைக் குடித்துவிட்டு, கால்களில் சதங்கை கட்டிக்கொண்டு, வெட்க உணர்வைத் தூக்கி எறிந்துவிட்டு, எளிய மனிதர்களோடு குதூகலமாக ஆடி மகிழ்கிறார் மீரா. "உலக ஆசாபாசங்கள் அனைத்தும் பொய். கிரிதரரை சிக்கெனப் பிடித்துக்கொண்டுவிட்டேன். எனக்கு இனிமேல் கிரிதர கோபாலன்தான் எல்லாமும். எனக்கு வேறு எவரும் கிடையாது" எனத் தன் பாடலில் உருகி உருகிச் சொல்கிறார் மீராபாய்.

பெண்களுக்கு மதிப்புக் கொடுக்காத ஒரு சமுதாயச் சூழலில் மீராபாய் போன்றதொரு சிறந்த பக்த சிரோமணி, பெண் கவிஞர் இருந்து, வாழ்ந்து, பக்திப் பாடல்கள் பாடியது மிகப்பெரிய போற்றுதலுக்குரிய செயலாகவே கருதப்பட வேண்டும்.

# உழைப்பின் பெருமை

ஒரு சமயம் ஒரு காட்டரபி நபிகள் நாயகம் (ஸல்) முஸாஃபஹா செய்யும்போது, அவருடைய கரத்தை நாயகம் அவர்கள் முத்தமிட்டார்கள்.

இதனைக் கண்டு வியந்த தோழர்கள் காரணம் கேட்ட போது, "அவருடைய கரங்கள் உழைக்கும் கரங்கள். அதனால் முத்தமிட்டேன்" என்றார்.

உழைப்பின் பெருமையை இந்தக் கதையின் மூலமும் தெரிந்து கொள்ளலாம். நவாப் சாஹிப் என்பவருக்கு ஒரு மகன். சாஹிப் இருந்த காலத்தில் பெரும் சொத்து இருந்தது. சொத்திருக்கிறதே என்பதற்காக, ஒருநாள் கூட உழைத்தது கிடையாது. "செக்களவு பொன் இருந்தாலும், செதுக்கித் தின்றால் காணாது" என்று ஒரு சொல்வார்கள் அல்லவா! அதற்கேற்றாற்போல், சாஹிபின் சொத்துகளும் கரைய ஆரம்பித்தது. ஒவ்வொன்றாக விற்று சாப்பிட்டார். ஒருநாள் இறந்தும் போனார். அவர் கடைசியாக விட்டுச்சென்றது ஒரு ஓட்டை வீடும், ஓரளவு நிலமுமே.

அவரது மகன் தந்தையின் பெயரைக் காப்பாற்ற எண்ணினான் போலும்! அப்பாவுக்கு தப்பாத பிள்ளையாக, அவனுக்கும் உழைப்பில் நாட்டமில்லை. அதற்காக, கொஞ்சம் நஞ்சமிருந்த நிலங்களையும் கூறுபோட்டு விற்றான். குறுக்கு வழியிலும் இறங்கிவிட்டான். பணம் கரைந்தது.

ஒருமுறை மறைந்த சாஹிபின் நண்பர், அவரது மகனைப் பார்த்தார். அவனது நிலைக்காக வருந்தினார். அவன் திருந்தவேண்டும் என்பதற்காக, "தம்பி! இப்படி கஷ்டப்படுறியே! உங்க அப்பா உங்க தோட்டத்தில் இருக்கிற ஏதோ ஒரு மரத்தின் அடியில் புதையல் வைத்திருப்பதாக என்னிடம் சொல்லியிருக்கிறார். தோண்டிப்பார், கிடைக்கும்" என சொல்லி விட்டுச் சென்று விட்டார்.

சாஹிபின் மகனுக்கு ஏக ஆனந்தம். மண்வெட்டியும், கடப்பாரையுமாக கிளம்பி விட்டான். ஒவ்வொரு மரத்தடியையும் தோண்டிப் பார்த்தான். ஏதும் சிக்கவில்லை. பெரியவர் தன்னை ஏமாற்றிவிட்டார் என்பதைப் புரிந்து கொண்டான். சில மாதங்கள் கழித்து அந்தப் பெரியவர் வந்தார். "என்னை இப்படி ஏமாற்றி விட்டீர்களே! பொய்தானே சொன்னீர்கள்!" என்று கேட்டான்.

"இல்லை! உன் தோட்டத்தை இப்போது போய் பார், புதையல் இருக்கிறது,"" என்றார். அவனும் புறப்பட்டான். பெரியவரும் உடன் சென்றார். அங்கே மரங்களில் பழங்கள் பழுத்துக் கிடந்தன.



"பார்த்தாயா! நீ மண்வெட்டியும், கடப்பாரையும் கொண்டு ஒவ்வொரு மரத்தின் அடியிலும் தோண்டியதால், சமீபத்தில் பெய்த மழையில் தண்ணீர் நிரம்பி, காய்ந்து கிடந்த மரங்கள் கூட தளிர்த்து விட்டன. விளைச்சல் அதிகமாக இருக்கிறது. இங்குள்ள பழங்களை விற்றாலே, பல ஆயிரம் தேறுமே! உழைப்பு தான் உண்மையான புதையல்" என்றார். உழைப்பின் பெருமையை உணர்ந்தான் அந்த வாலிபன்.

# வாரன் அண்டர்சன் மரணத்தின் வழி தப்பிய பயங்கரவாதி



“ஒரு கார்ட்போர்ட் பெட்டியில் அவர்கள் தங்களது இறந்த குழந்தையைப் புதைப்பதைக் கண்டேன். அந்தப் பெட்டியின் மீது - “ஜெனரல் எலெக்ட்ரிக் கம்பனி” - முன்னேற்றமே எமது சிறந்த தயாரிப்பு” என்ற வாசகம் அச்சிடப்பட்டிருந்தது.

- லூயி அல்ப்ரெடோ அரோகோ

இந்திய அதிகாரவர்க்கத்தின் ஆதரவோடும் துணையோடும் தப்பிச் சென்றவர் வாரன் அண்டர்சன். இந்திய மண்ணிலுள்ள போபால் என்ற நகரத்தில், சில கண நேரத்தில் நடைபெற்ற தொழிற்சாலை விபத்தில் பல்லாயிரக்கணக்கான இந்தியர்கள் மரணத்திற்குக் காரணமாயிருந்த இவர் தனது 79 வயதில் எதுவித குற்ற உணர்வுமின்றி மரணமானார். அண்டர்சனின் மரணம் சொல்வதெல்லாம் இந்தியாவில் எலிகளைவிட மனித உயிர்கள் என்பது மிக மலிவானவை என்பதைத்தான்.

வாரன் அண்டர்சன் என்பவர் அன்றைக்கு போபால் விஷ வாயுவான மெதைல் அய்சோசயனைட் கசிவிற்கு காரமான யூனியன் கார்பைட் ஆலைக்குப் பொறுப்பா னவர் மட்டுமல்ல இந்திய அதிகார வர்க்கம், காவல் மற்றும் நீதி வழங்கு துறைகள், என்பவை இந்திய மக்களுக்கானவை அல்ல என்பதையும் நமக்கு ஒருசேரச் சொல்லிச் சென்றவர்.

மனிதத் தவறுகளால் நேர்ந்த பேரழிவுகளின் துயரம் நிறைந்த போபாலில். இழப்பதற்கு எதுவுமற்ற கொடிய வெற்று நிலத்தின் எஞ்சிய நினைவுகளின் முப்பதாவது ஆண்டில் ஆயிரக்கணக்கான மனித சாம்பலின் மீதும், சாபங்களின் மீதும், எல்லா வழக்குகளிலிருந்தும், எல்லா குற்றங்களிலிருந்தும், எல்லாப் பொறுப்புகளிலிருந்தும், எல்லா ஆமோதிப்புகளிலிருந்தும், தான் ஒரு போதும் திரும்ப வேண்டியிராத மரணத்தின் வாயிலாகத் தப்பித்துக் கொண்டுவிட்டார் வாரன் அண்டர்சன். போபால் மக்களின் சாவு எப்படி நேர்ந்தது என்பதை தெரிந்திருந்த அமெரிக்கா, தான் விரும்பிய அண்டர்சனின் மரணமும்கூட இப்படியானதுதான். அதனால்தான் அலட்டிக் கொள்ளாமல் அவரது மரணத்தை ஒரு திங்கள் கழித்தே வெளியுலகிற்குத் தெரிவித்தது.

> பல்தேசியக் கம்பனி ஒன்றின் அக்கறையீனத்தால் ஏற்பட்ட விபத்தால் தனது மண்ணிலே மரணித்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நீதியை வழங்கத் தயாரில்லாத இந்திய அரசா? இலங்கையிடம் நமது விடுதலையைப் பரிந்துரைக்கப் போகிறது? எமக்குரிய ஜனநாயகத்தைத் தேடித் தரப்போகிறது? 1984 டிசம்பர் 2 ஆம் திகதி போபாலில் நிகழ்ந்த விஷ வாயு விபத்து எமக்கு ஒரு கற்பிதத்தைத் தருகிறது.
>
> - ஆசிரியர்

விபத்திற்கு முன்னரும் பின்னரும் விஷ வாயுவின் முழு இயல்பையும் போக்கையும் அறிந்திருந்த அண்டர்சன், ஆலையிலும், அதனை சுற்றி வதிந்திருந்த பல்லாயிரக் கணக்கானோருக்கும் “பேரிடர் மேலாண்மை என்ற ஒன்று தேவைப்படாது!” என்ற முடிவிற்கு வரும் துணிச்சலை எங்கிருந்து பெற்றிருக்க முடியும்? இந்திய மேலாதிக்க அரசின் செல்லப்பிள்ளை அவர் என்பதை ஊகித்து அறிவது கடினமானதல்ல. சொல்லப்போனால் இதே யூனியன் கார்பைட் ஆலையை அமைக்கக் கனடா நாட்டு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துத் துரத்தியடித்த நிலையிலும், சொந்த நாடான அமெரிக்காவின் சட்டதிட்டங்கள் கடுமையைக் காட்டியமையாலும் கொல்வதற்கு எளிதான மக்கள் நிரம்பிய, இந்திய மண்ணே அண்டர்சனுக்கும், அவரது நிறுவனத்திற்கும் இசைவளித்தது.

அண்டர்சன் கசியவிட்டுவிட்டுப் போன நச்சின் கொடிய மூச்சானது இன்றும் போபாலின் பஞ்சபூதங்களை “மெல்லக் கொல்லும்” (Silent Killer) விஷமாக மாற்றிவிட்டிருக்கிறது. வாயு கசிந்த மூன்றாவது நாளே ஆலையை சுற்றிலும் உள்ள வாயுவின் நச்சு முறிக்கப்பட்டுவிட்டதாக அரசும், அதன் நிர்வாகமும் அறிவித்திருந்தாலும் போபாலின் சகல இடங்களிலும் அதன் கோரமுகம் இன்றுவரை தலைகாட்டத்தான் செய்கிறது.

இயற்கையைச் சீர்குலைப்பதில் நச்சுவாயுக் கசிவின் தாக்கம் கோரத் தாண்டவமாடத் தொடங்கியது. யூனியன் கார்பைட் நிறுவனத்தினர் முதலில் மண்ணில் கை வைத்து இறுதியில் பெண்ணில் முடித்தார்கள்.

போபாலில் புற்று நோய் மற்றும் நுரையீரல் தொடர்பான நோய் கண்டு இறப்பது என்பது அங்கு சாதாரண நிகழ்வாயிற்று. புற்று நோயால் மட்டும் இதுவரையிலும் 35 ஆயிரம்பேருக்கு மேலாக இறந்து போயுள்ளனர். எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் சொல்லப்படுகிறது. இன்னும் பல இனந்தெரியாத நோய்களுக்கு மக்கள் ஆளாகிக் கொண்டுள்ளனர்.



1984 டிசம்பர் 2 ஆம் திகதி விபத்து நடைபெற்றுப் பதினைந்து வருடங்களின் பின்னர், அதாவது 1999 ஆம் ஆண்டு நவம்பரில் அமெரிக்காவைச் சேர்ந்த கிரீன் பீஸ் அமைப்பினர் யூனியன் கார்பைட் ஆலையைச் சுற்றியுள்ள நிலம், நீர் ஆகியவற்றை ஆய்வு செய்ததில், பல்வேறு நச்சு இரசாயனப் பொருட்கள் அவற்றில் காணப்படுவதைக் கண்டறிந்து தெரியப்படுத்தினர்.

2002 ஜனவரியில் சிருஷ்டி என்ற அமைப்பினர் நடத்திய களப் பரிசோதனையில் போபால் ஆலைப் பகுதியில் வசிக்கும் தாய்மார்களின் தாய்ப்பாலில் பாதரசம் மற்றும் காரியம் அதிகளவு இருப்பதைக் கண்டு அதிர்ந்தனர். ஆக தாய்ப்பாலை உறிஞ்சும் குழந்தைகளையும் குடிக்கத் தொடங்கிய நஞ்சானது, அடுத்த தலைமுறையையும் தாக்கத் தொடங்கியது. மேலும் பெண்கள் தொடர்பான வேறு சில சிக்கல்களும் எழத் தொடங்கின. பேறுகாலப் பெண்களின் கரு கலைந்து போவது, உடல் உறுப்புக் குறைபாடுகளுடன் குழந்தைகள் பிறப்பது என அன்றைய நாளில் நிகழ்ந்தது விஷ வாயு விபத்து என்பதை சாதாரண மக்களால் ஊகித்தறிய இயலாமலே இறந்து போனதற்கு அவர்களின் நள்ளிரவு உறக்கம் மட்டும் காரணமல்ல, இப்படி ஒன்று நடந்துவிட்டதை உடனடியாக அறிந்து கொண்டும் தூங்குவது போல பாசங்கு செய்த அரசதிகார வர்க்கமும்தான் காரணம் எனலாம். விபத்தில் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த பல்லாயிரக் கணக்கானோரை கைவிட்டுவிட்ட அரசு, அன்றிரவே அண்டேர்சன் என்ற ஒற்றை மனிதரை மட்டும் காப்பாற்றி அக்கரையில் சேர்த்துக்கொண்டது. என்றாவது ஒருநாள் வாயு விபத்து நடக்கும் என்பதை அறியாதவரல்லர் அண்டர்சன்.

நிறுவனத்திற்கான இயந்திரங்கள் வாங்க முடிவானபோதே அவை குறைபாடு உடையவை என்பதைச் சோதனையில் அறிந்திருந்தவர்தான் அவர். மேலும் 10 தொன் வரை மட்டுமே தாங்கக் கூடிய ஆலையின்

(18ஆம் பக்கம் பார்க்க)






# நனவாகும் தாயக அணிக் கனவு!

■ கங்காதரன்

வடக்கு - கிழக்கு உதைபந்தாட்ட வீரர்களின் திறமையை உயர்த்துவதற்காகவும் அத்திறமையை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்லும் நோக்குடனும் வட, கிழக்கு பிறீமியர் லீக் (NEPL) உருவாக்கம் பெற்றுள்ளது.

இந்த லீக்கின் வட, கிழக்கு உதைபந்தாட்ட ஆர்வலர்கள் ஒன்றிணைந்து புலம்பெயர் நாட்டவரின் நிதிப் பங்களிப்புடன் இவ் அத்திபாரத்தை இட்டுள்ளனர். தமிழரின் வீரத்தை உதைபந்தாட்டம் மூலம் வெளிக்காட்டியதாக அணி ஒன்றை உருவாக்கி சர்வதேச அளவில் வட, கிழக்கு உதைபந்தாட்ட தரத்தை வெளிப்படுத்துவதே பிரதான நோக்காக அமைந்துள்ளது. வட, கிழக்கு பிறீமியர் லீக் அங்குரார்ப்பண நிகழ்வும், சின்னம் அறிமுக நிகழ்வும் கடந்த 12ஆம் திகதி ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. இதில் வட, கிழக்கைச் சேர்ந்த உதைபந்தாட்ட ஆர்வலர்கள் கலந்திருந்தனர்.

இந்த லீக்கின் தலைவராக கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். நிமலதாஸ் செயற்படுகின்றார். இதனைவிட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கிளிபேட் அன்ரனிப் பிள்ளை, வடக்கின் உதைபந்தாட்ட சிகரம் என அழைக்கப்படும் தர்மகுலநாதன் (வெள்ளை), மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த டிக் கோனி, ஜெராட் மற்றும் ஏனைய மாவட்ட லீக்கைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் இடம்பெற்றுள்ளனர். மேற்படி உதைபந்தாட்ட ஆர்வலர்களின் முயற்சியால் இவ் லீக் உதயமாகியுள்ளது. இதன்மூலம் வட, கிழக்கு வீரர்கள் தம்மை நிரூபிக்கும் கட்டாயத்தில் உள்ளனர்.

**செயற்படும் முறை**

முதல்கட்டமாக இந்த லீக் ஐ.பி. எல். வடிவத்தில் 12 அணிகளை ஏலத்தில் விற்று ஒவ்வொரு அணியும் வட, கிழக்கு வீரர்களை ஏலத்தில் தமது அணிக்காக கொள்வனவு செய்ய வேண்டும். பின்னர் 12 அணிகளுக்கிடையே போட்டிகள் நடக்கும். தற்போது 12 அணிகளில் 8 அணிகள் ஏலத்துக்கு வாங்கப்பட்டுள்ளன. மீதி அணிகள் வாங்கப்படவில்லை. இறுதியாக கிடைத்த தகவலின்படி 8அணிகளுக்கு இடையே போட்டி நடைபெறுமென கூறப்படுகின்றது. இதில் யாழ். மாவட்டத்துக்கு மூன்று அணிகள் ஏலத்தில் விடப்பட்டன. முதலாவது அணியை ரில்கோ உரிமையாளர் கொள்வனவு செய்தார். இவ் அணிக்கு ரில்கோ பிளாஸ்டர்ஸ் என பெயரிட்டுள்ளார்.

இரண்டாவது அணியை ரியூப் தமிழ் இணைய உரிமையாளர் வாங்கி வல்வை விளையாட்டுக்கழகம் என பெயரிட்டுள்ளார்.

மூன்றாவது அணியை லண்டன் தமிழ் பாடசாலைகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் எட்வின் குணரட்ணம் வாங்கியுள்ளார். இவ்வணிக்கு தமிழ் யுனைற்றற் அணி என பெயரிடப்பட்டது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்வலர்கள் இணைந்து 2அணிகளை கொள்வனவு செய்தனர். கிங்ஸ் லெவன் மன்னார், மன்னார் உதைபந்தாட்ட அணி என பெயரிடப்பட்டுள்ளன.

இதேபோன்று வவுனியா லயன்ஸ் கிளி. சலஞ்சர்ஸ், முல்லை. றோயல்ஸ் அணிகளை அவ் மாவட்டத்துக்கு உரிய பெயர் குறிப்பிட விரும்பாத உதைபந்தாட்ட ஆர்வலர்கள் வாங்கியுள்ளனர். ஒவ்வொரு அணிகளும் போட்டிபோட்டு வட,கிழக்கைச் சேர்ந்த வீரர்களை தமது அணிக்காக அதிகளவு பணத்தைக் கொடுத்து கொள்வனவு செய்துள்ளனர். ஒரு அணியில் வட, கிழக்கைச் சேர்ந்த நான்கு வீரர்கள் இடம்பெறலாம். ஆனால், போட்டியின்போது இரண்டு வீரர்கள் மட்டுமே விளையாட முடியும் என்ற விதிமுறையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**முதல் பரிசு: 50 இலட்சம்**

போட்டிகள் யாவும் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் எதிர்வரும் மே, ஜூன் மாதங்களில் இடம்பெறவுள்ளது. அனைத்துப் போட்டிகளும் மின்னொளியில் இடம்பெறும். ஒவ்வொரு போட்டிக்கும் 4,000 இரசிகர்கள் வருவார்கள் என போட்டி ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்த்துள்ளனர். இந்தப் போட்டியில் சம்பியனாகும் அணிக்கு 50 இலட்சம் ரூபா பணப் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் இடத்துக்கு 30 இலட்சம் ரூபாவும், மூன்றாம் இடத்துக்கு 15 லட்சம் ரூபாவும், நான்காம் இடத்துக்கு 5லட்சம் ரூபா பணப் பரிசும் வழங்கப்படவுள்ளன.

இதைவிட ஒவ்வொரு போட்டியிலும் சிறந்த விளையாட்டு வீரனுக்கு 10,000 ரூபா வழங்கப்படவுள்ளது. ஆட்டநாயகன், தொடர் நாயகனுக்கு மோட்டார் சைக்கிளும் வழங்கப்படவுள்ளது. இலங்கை மண்ணில் இவ்வளவு பெருந்தொகை பரிசு இதுவரை எந்தப் போட்டிக்கும் வழங்கப்படவில்லை. எனவே தாயக மண்ணை நேசிக்கின்ற உள்ளங்கள் எடுத்திருக்கும் இம் முயற்சிக்கு எல்லோரும் இணைந்து முழுமையான ஒத்துழைப்பும் ஊக்கமும் கொடுக்க வேண்டும்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வின் தலைவர் நிமலதாஸ் உரையாற்றுகையில்,

“சிந்தனையால் இணைவோம் செயலால் உயர்வோம்” எனும் கூற்றுக்கு அமைய வட, கிழக்கு வீரர்களின் தரத்தை உயர்த்துவதும் ஒற்றுமையை பலப்படுத்துவதுமே எமது நோக்கம். நாம் பல தடவைகள் எடுத்த முயற்சி பல காரணங்களால் சறுக்கி தற்போது முழுமையான நிலையை அடைந்திருக்கிறோம். எமது இளைஞர்கள் சரியான பாதை கிடைக்காமல் அடிவருடிகள்போல் வெளிமாவட்ட அணிகளில் குறைந்த ஊதியத்தில் விளையாடி வருகின்றனர். இவர்களது திறமைக்கு ஏற்ற ஊதியத்தை வழங்கவும் அவர்களின் திறனை உயர்த்துவதற்கு இந்த லீக் சிறந்த வழியை ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளது. இதற்காக சரியான, நிலையான அத்திபாரத்தை இட்டு இருக்கிறோம். உதைபந்தாட்டத்தின் மூலம் உழைக்கலாம். விளையாட்டின் மூலம் வீரத்தை வெளிக்காட்டலாம் என்ற அடிப்படைக்கு அமைய நாம் வீரர்களை வழிப்படுத்தவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

“நம் வீரர்களும் நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. சரியான முறையில், சரியான வழியில் சென்றால் தாயக அணி வெகுவிரைவில் மலரும்.”

# திருப்தி

■ சாரல் நாடன்

அவளால் எந்தவிதமான முடிவுக்கும் வரமுடியவில்லை. அவள் செய்தது சரியானதுதானா? அவளுடைய செய்கையை இந்த உலகம் ஏற்றுக்கொள்ளப் போகிறதா? உலகம் ஏற்றுக் கொள்கிறதோ இல்லையோ அவள் உள்ளம் அதை ஏற்றுக் கொள்கிறதா? இப்படி நடந்துகொள்ள அவளுக்கு எப்படித் துணிவு வந்தது?

தலைமுறை தலைமுறையாக உடலுழைப்பைத் தர பழகிப்போன ஒரு சமுதாயத்தில் பிறந்தமையால் அவளுக்கு இத்துணிவு ஏற்பட்டிருக்குமோ? இருக்கலாம்.

உழைத்துப் பிழைப்பதையே வாழ்க்கை நியதியாக ஏற்றுக் கொண்ட தோட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவள். ஆணோ, பெண்ணோ. வாழ்க்கை நியதி ஒன்றுதான். ஓழிவில்லாது உழைக்கமுடிந்த ஆண்பிள்ளையின் வருவாய் நின்றுவிடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டாலும் கூட எந்தக் குடும்பமும் நிலைகுலைந்து போய் விடுவதில்லை. அந்தக் குடும்பத்திலுள்ள பெண் அதை ஈடு செய்து விடுவாள்.

அவனுடைய வருந்திச் செய்கின்ற உழைப்பு: உடலில் வலுவேண்டும் அதைச் செய்ய. பெண்ணின் உழைப்பு நளினமானது. நுட்பம் நிறைந்தது.

மலைச்சரிவுகளில் பரந்து - விரிந்து கிடக்கிற தேயிலைத் தளிரனைத்தும் இயற்கை தந்த செல்வம். பெண்களின் கரம்படுவதால் துளிர்த்து துளிர்த்து நிறைகிற அதன் வனப்பே அவர்கள் வாழ்வில் வளமூட்டுகிறது. அந்தச் செடிகளுக்கு வளமூட்டுவதற்கென்றே அந்த வனிதைகள் உயிர் வாழ்கிறார்கள், உடல் வளைத்து உழைக்கிறார்கள்.

அவள் உழைப்பையே வாழ்வாகக் கொண்டவள். இரண்டு தங்கைகளோடு பிறந்தவள். அந்த மூவரின் வருமானத்தில் தலையெடுத்ததுதான் அவர்களின் குடும்பம். அந்த ஒன்றுக்காகவே அவளை மருமகளாக்கிக் கொண்டவர் அவளது கணவனின் பெற்றோர்.

தன்மகனின் வாழ்க்கை சீர்படவும் அவன் தலையெடுக்கவும் அவளின் துணை பயன்படும் என்று அவர்கள் நினைத்தார்கள். அவர்கள் எதிர்பார்த்ததில் தவறில்லை. அது சுயநலமான எதிர்பார்ப்புமல்ல. எந்த பெற்றோரும் இயல்பாக எதிர்பார்க்கக் கூடியதுதான்.

ஆனால் அதுநிறைவேறிட வேண்டுமென்ற அவசியமிருக்கிறதா? நிறைவேறினாலும், எதிர்பார்த்த முழு அளவில் என்ற கட்டாயமுண்டா? எதிர்பார்த்ததற்கு மாறாக எதுவும் நடந்துவிடாமலிருக்க யாரால் உறுதிதர முடியும்?

அவளது கணவன் முன்னிலும் அதிகமாக குடித்தான். தனிக்குடித்தனம், முன்னிலும் கூடிய வருவாய். அவன் குடி கூடுவதற்கு யாரைக் கேட்க வேண்டும்? திருமணமான ஆரம்ப நாட்களில், காதல் பருவத்தின் துடிப்பான நினைவுகளோடு கணவனுடன் வாழத்தொடங்கிய காலத்தில், தான் அத்தனை காலமும் நினைவுத்திரையில் வரைந்து வந்திருந்த வாழ்க்கைச் சித்திரத்தை ஆடவனொருத்தனோடு வாழ்ந்து சரிபார்க்க ஆரம்பித்தபோது அவள் அதைப்பற்றி அதிகம் கவலைப்படவில்லை. கால ஓட்டத்தில் அதைச் சரிபடுத்திவிடலாமென்று நினைத்தாள். அவள் நினைப்பும் பொய்யாகிவிட்டது.



அவள் கணவனை யாராலும் திருத்த முடியவில்லை. கடும் உழைப்பாளி அவன் - அதனால் அவனைக் கடிந்து பேச யாருக்கும் வழி இல்லாமற் போய்விட்டது.

தான் உழைத்து திரண்ட அவன் அங்கம் குடித்துக் கெட்டுக் கொண்டிருந்தது. கணவனின் அந்த நிலையை எந்தப் பெண்தான் அனுமதிப்பாள்?

அவர்களிருவராயிருந்தபோது அவளால் ஓரளவுக்கேனும் பொறுத்துக் கொள்ள முடிந்தது. ஆனால் குழந்தையொன்று பிறந்து அவர்களோடு வளரத் தொடங்கிய போது அவளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

தாங்களிருவராக இருந்து கொஞ்சி குலாவிய நாட்களில் மாதா மாதம் குடித்தே அழிந்த நூறு ரூபாயை பற்றிய மதிப்பை இன்று அவள் அதிகம் உணர்ந்தாள்.

அந்த உணர்வு அவளுக்கு எப்படி வந்தது? குழந்தை பிறந்ததினாலா? தன் குழந்தையின் எதிர்காலம் குறித்துச் சிந்திக்கிற அளவுக்கு, தோட்டத்துப் பெண்ணின் மனம் பக்குவமடைந்து விட்டதா?

கங்குல் மறைகிற காலை நேரத்தில், கதிரொளி தோன்றுகிறதை அவள் கவனித்திருக்கிறாள். ஆனால், மறைவையும் தோற்றத்தையும் மனதில் வாங்கி, எதனால் எது விளைகிறதென்றெண்ணிப் பார்க்க அவள் இது காறும் முனைந்ததில்லை.

அவள் அப்படிச் செய்யவில்லை யென்பதற்காக இரவு விடியாமலும் - பொழுது மறையாமலுமா இருந்து விடுகின்றன?

மனித சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சி எந்தெந்த உருவிலெல்லாமோ உலகின் மூலைமுடுக்கெல்லாம் பரவிக் கொண்டு வருகிறது. காலம் செல்லலாம், வேகம் குறையலாம். ஆனால், அதன் பரவுதல் ஏற்பட்டேதீரும்.

வெள்ளைக்காரனும் பறங்கியனும் வகித்த துரைவேலைக்குச் சிங்களவர்களும் தமிழரும் வந்து விட்டிருக்கிறதை அவள் நேரில் பார்த்திருக்கிறாள். எத்தகைய மாறுதல்? இப்படி ஒருநிலை வரும் என்று யார் நினைத்திருப்பார்கள்?

நகர்ப்புறக் கல்லூரிகளில் படித்துவிட்டு மேசோடும் சப்பாத்தும் அணிந்து வேலைபார்க்க ஆரம்பித்திருக்கும் 'சுப்பர் வைசர்களை' அவள் நாளாந்தம் பார்த்திருக்கிறாள்? அவர்களில் பலரும் தோட்டச் சமுதாயத்தில் பிறந்து வளர்ந்தவர்கள்தாமே!

தொழிற்சாலையிலும் ஆபீசிலும் உத்தியோகம் வகிப்பவர்களில் வாழ்க்கையின் அடிமட்டத்தில் நசுக்குண்டு கிடந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லாமல் போய்விட்டார்கள்?

அவளுக்கு ஏன் இந்த நினைப்பெல்லாம்? தன் மகளையும் அப்படி ஒரு நிலைக்கு உயர்த்திவிட வேண்டும் என்று கனவு காணுகிறாளா? ஒரு தாய் காணக்கூடிய கனவுதானது. ஆனால், அது நிறைவேறிவிடுகிற சாத்தியமிருக்கிறதா? அவளது கணவன் குடிப்பழக்கத்தை நிறுத்தாத வரைக்கும்?

அவன் எங்கே நிறுத்தப் போகிறான்? அவன் நிறுத்தவில்லை என்பதற்காக அவள் தன் ஆசையை மறந்து விடப்போகிறாளா? அவள்தான் ஏன் தன் பழக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்? அவள் மகன் படித்து உத்தியோகமா செய்யப் போகிறான்?

'போடி பயித்தியமே புதுசா என்னென்னமோ சொல்றியே, உன் மகன் படிச்சி உத்தியோகமா செய்யப்போகிறான்? அதுக்கெல்லாம் பொறந்து வரணுமடி" அவன் அடித்துச் சொல்லிவிட்டான்.

'கத்தியும் மண்வெட்டியும், முள்ளும் கடப்பாரையும் அவர்களை நம்பியே தயாரிக்கப்படுகின்றனவாம். அவர்களின் கைகளில் இருக்கும் போதுதான் அவை மதிக்கப்படுகின்றனவாம்' தலைமுறை தலைமுறையாக இருந்துவரும் அந்தப்பழக்கத்தை மாற்ற நினைப்பது பைத்தியக்காரத்தனமல்லவா?

'உன் புத்தி உன்னை விட்டு எங்கேபோகும்? என் புள்ளை படிச்சாகணும்' அவள் பிடிவாதம் செய்தாள். அவர்கள் குடும்ப வாழ்வில் புகைச்சல் ஆரம்பமாகிவிட்டது. பொழுதோடு வருமிரவு புகைச்சலையும் அழைத்துவரும்.

அப்படி ஒரு நிலைக்கா அவள் ஆசைப்பட்டாள்? அவள் நினைத்தது நடக்குமென்றால் அந்த நிலையையும் ஏற்று வாழ அவள் தயாராக இருந்தாள். ஆனால், அவள் விரும்பியது நடைபெறுமென்று தோன்றவில்லை. அதனால் அவளுக்கும் அப்படிச் செய்வதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது.

அவளது ஆசையை ஆரம்பத்தில் பரிகசித்தவர்கள் அவளது தற்போதைய செயலைக்கண்டதும் பழிக்கவே ஆரம்பித்து விட்டனர். 'ஓடுகாலி, குடும்ப பொண்ணா அவ' சமூகம் முழுக்க அவளைப் பழிக்க ஆரம்பித்தது. அவள் தாய் அவளை ஏசினாள். அவளது தந்தை அவளைக் கண்டித்தார். அவளது ஆசை நியாயமானதுதான். அதற்காக அப்படியா நடந்து கொள்வது? அவளது நடத்தை தமிழ்ப் பெண் ஒருத்திக்கு பெருமைதரக்கூடியதுதானா?

யாருடைய ஏச்சையும் அவள் லட்சியம் செய்யவில்லை. யாருடைய பேச்சும் இனி அவளைக் கட்டுப்படுத்தப் போவதில்லை. அவள் தீர்க்கமான முடிவு செய்துவிட்டாள்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# 35,658 கோடி திருட்டு!

2017 இல் மட்டும் 60 இலட்சம் இணைய மேய்ச்சல்காரர்கள், "தாக்குதலுக்கு" உள்ளாகி இருக்கின்றார்கள். அதுவும் இந்தத் தொகை அவுஸ்திரேலியாவில் மட்டும் என்பது அதிர்ச்சியான தகவல்! இணையப் பாவனையாளர்கள் நாளுக்கு நாள் அசுர வேகத்தில் அதிகரிப்பது போல, இணையத்தை திருட்டுத்தனமாக ஊடுருவுபவர்களும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றார்கள்.

அவுஸ்ரேலியாவின் சனத்தொகையில்



மூன்றிலொரு பகுதியினர் பாதிக்கப்பட்டிருப்பதோடு, 230 கோடி டொலர் தொகையும் இழப்பு ஏற்பட்டுள்ளது. வங்கிக் கணக்குகளை முடக்கும் இந்தப் பொல்லாத "ஆக்கிரமிப்பிலிருந்து" விடுபட மிகக் குறைவானவர்களே பாதுகாப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள் என்று புதிய ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளன.

27 வயதான ஜொசுவா கேஸ்மோர் என்பவர், தன் கடன் அட்டை விவரங்களைத் திருடியவர்கள்,12,000 டொலர் (சுமாராக 19இலட்சம் ரூபா) தொகைக்கு , கடந்த வருடம் வலன்ரைன் தினமன்று, கணினி தொடக்கம் பூக்கள் வரை வாங்கி, தன்னை 19 இலட்சம் ரூபாவுக்கு கடனாளியாக்கி இருக்கின்றார்கள் என்று குமுறுகிறார்.

இவரைப் போல 60 இலட்சம் அவுஸ்ரேலியர்கள், தங்களுக்குள்ள நிதி அழுத்தங்களோடு, இந்தச் சைபர் குற்றங்களாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகின் பிரபல்யங்களையும் இவர்கள் விட்டுவைக்கவில்லை. நிக்கலோ கிட்மான் போன்ற ஹொலிவூட் பிரபல்யங்களின் வங்கிக் கணக்குகளிலும் இவர்கள் கை வைத்துள்ளார்கள்.

2014இல் ஜெனிபர் லோரன்ஸ், கிம் கர்டாஷியான் போன்றவர்கள் இவர்களிடம் சிக்கியிருந்தார்கள். உங்கள் அலைபேசிகளைத் தவற விடுவதும், சிக்கலற்ற கடவைச் சொற்களை உபயோகிப்பதும், வீண்வம்பை விலைக்கு வாங்க உதவும் என்பதை என்றுமே மறந்து விடாதீர்கள்.

# மரத்துடன் திருமணம்



ஏவாளுக்கு ஆதாமைப் படைத்து, இவன் உன் வாழ்க்கைத் துணைவன் என்று சொல்லி வைத்தார் கடவுள். ஆனால் மனிதனோ புத்தி சுவாதீனம் தலைக்கேறி, அவன் இஷ்டப்படி எல்லாம் வாழ ஆரம்பித்து விட்டான். "ஏவாளுக்கு இன்னொரு ஏவாள்", "ஆதாமுக்கு இன்னொரு ஆதாம்" என்றெல்லாம் வாழத் தலைப்பட்டு விட்டது உலகம்.

இதையெல்லாம் ஓரங் கட்டுவதுபோல, வெறும் ஜடங்களையும் வாழ்க்கைத் துணையாக ஏற்கும் காலம் வந்திருக்கின்றது. சட்ட ரீதியான திருமணம் இல்லை என்ற போதிலும், மெக்ஸிக்கோவில், இளம் பெண்கள், மரங்களைக் கணவனாக வரித்துக் கொள்ளும் நிகழ்வுகள் இங்கு புதினமாகத் திகழ்கின்றது. மரங்கள் களவாக வெட்டிச் சாய்க்கப்படுவதை எதிர்த்தே, இந்தப் புதுமைத் திருமணங்கள் இடம்பெற்று வருகின்றன.

மெக்ஸிக்கோவின் நிலப்பரப்பில் மூன்றிலொரு பகுதி, காடுகள்தான். இங்கே களவாக மரங்களை வெட்டுவது பெரிய களவாணிகளின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றது. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட ஐந்து பிராந்தியங்களுள் ஒன்றாக ஒயக்ஸாக்கா இருக்கின்றது.

"மரத்தை மணஞ் செய்வோம்" என்ற அமைப்பை ஆரம்பித்தது. இங்குள்ள இன்கா இனத்தவர்களின் வழமையைப் பின்பற்றிய சடங்குகள் நடத்தப்பட்டு, இளம் பெண்கள் நல்ல மரங்களைத் தேர்ந்தெடுத்து, தமது கணவன்மாராக வரித்துக் கொள்கிறார்கள். திருமணப் பெண்ணைப் போல, அழகாக வெண்ணிற ஆடையணிந்து வரும் இவர்கள், தாம் தெரிந்தெடுக்கும் மரத்தைச் சுற்றி, வரிந்து கட்டிவிடுகிறார்கள். அதை நம் மொழியில் சொல்வதானால், மரத்துக்கு "தாலி கட்டி" சொந்தமாக்கி விடுகிறார்கள்

"மரங்கள் எம்முடன் பேசுவதில்லை. ஆனால் அவை ஓலமிடுவது எம் காதில் விழுகின்றது. அநியாயமாக அழிகின்ற மரங்களை நாம் காப்பாற்றுவோம்" என்கிறார் மணக்கோலத்தில் நின்ற ஓர் இளம்பெண்!.

# முடிந்த கதையா? காட்டுக் குதிரைகளின் கதை

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்

காட்டுப் பூனைகள், காட்டு நாய்கள் போல், காட்டுக் குதிரைகள் இன்றும் இருக்கின்றனவா? காட்டுக் குதிரை என்பது, யாரோ ஒருவரால் , வீட்டில் சாதுவான மிருகமாக வளர்க்கப்பட்டு, பின்பு, எஜமானிடமிருந்து தப்பியோடி, தன்னிச்சையாக வளர்ந்த ஒன்று என்கிறது புதிய ஆய்வு. இந்த ஆய்வின்படி பார்த்தால், உண்மையான காட்டுக் குதிரைகள், பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பு இல்லாது அழிந்து விட்டன என்றே கொள்ளுதல் வேண்டும்.

அமெரிக்காவிலுள்ள முஸ்ராங் என்ற இனக் காட்டுக் குதிரைபோல, உலக நாடுகளெங்கும் உள்ள "காட்டுக் குதிரைகள்"



என்று சொல்லப்படும் குதிரைகள், என்றோ எவராலோ வளர்க்கப்பட்டு, தப்பியோடியவைதான் என்பதே இவர்கள் ஆய்வின் முடிவு. இந்த ஆய்வில் சம்பந்தப்பட்ட அமெரிக்காவின் கன்ஸாஸ் மாநிலப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் உயிரியலாளர் சன்டிரா ஓல்சன், இது பெரிய ஆச்சரியம் என்று அபிப்பிராயப்படுகிறார்.

இதன்படி பார்த்தால், மொங்கோலியாவில் இன்று எஞ்சியிருக்கும் 2000 வரையிலான குதிரைகள்தான். உலகில் காட்டுக்குதிரைகள் எஞ்சியுள்ள ஒரே இடம் என்று இதுவரையில் கருதப்பட்டு வந்தது. இந்தக் குதிரைகள் கூட, அறுபதுகளில், அழியும் விளிம்பு நிலையில் இருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இவற்றை முறையாக வளர்க்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதால், அழிவிலிருந்து மீண்டன.

ஆனால், இவர்கள் ஆய்வின்படி, இந்த இனக் குதிரைகள் காட்டுக் குதிரைகள் அல்ல. 5,500 வருடங்களுக்கு முன்பு, வட கஸகஸ்தானில், வாழ்ந்தவர்களால் வளர்க்கப்பட்டு வந்தவைதான் என்று கண்டறியப்பட்டுள்ளது. அதேபோல காட்டுக் குதிரைகள் எனச் சொல்லப்படும் அமெரிக்காவின் முஸ்ராங் இனக் குதிரைகள், ஸ்பானியர்களால், ஒரு நூற்றாண்டுக்கு முன்னர், வட அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்டமையால் கண்டறியப்பட்டுள்ளது. கண்ணால் காண்பது பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்து அறிவதே மெய்.

யோக நாராயணன்



# காலம் கடத்தும் ஆணைக்குழுக்கள்

தற்சமயம் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 37ஆவது கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கம் ஒரு நெருக்கடி நிலைமையைச் சந்திக்க வேண்டி வரலாம் என எதிர்பார்க்கப்பட்டது. இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகப் பொறுப்புக் கூறல் சம்பந்தமாக 2015 ஆம் ஆண்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இரண்டு வருடங்களாக நிறைவேற்றப்படாத நிலையில் இலங்கைக்குக் கடந்த வருடம் மேலும் இரு வருடங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது. தற்சமயம் அதில் ஒருவருடம் நிறைவடைந்துவிட்ட போதிலும் உருப்படியான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அது தொடர்பாக ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது கடும் அதிருப்தியைத் தெரிவித்துள்ளதுடன், சர்வதேச நாடுகள் இவ்விடயம் தொடர்பாக மாற்று வழிகளைக் கையாள்வது தொடர்பாக ஆராய வேண்டுமெனவும் கேட்டுள்ளார். இதற்குப் பதிலளிப்பதற்கென இலங்கை அரசு சில விடயங்களைக் கையில் வைத்துள்ளது. படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு பகுதி காணிகள் விடுவிக்கப்பட்டு விட்டதெனவும், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் அமைக்கப்பட்டுவிட்டதெனவும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் சார்பில் கருத்துக்கள் முன் வைக்கப்படும்.

இப்படியான ஒரு நெருக்கடியை இலங்கை சமாளிக்க வேண்டிய இந்த நிலையில்தான் கிரிந்தலை, அம்பாறை, கண்டி ஆகிய பகுதிகளில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளும், பேரழிவுகளும் இலங்கை அரசை சர்வதேச அளவில் புதிய நெருக்கடிக்குள் தள்ளியுள்ளன. கடந்த காலங்களில் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையைக் காப்பாற்றிய முஸ்லிம் நாடுகள்கூட தற்சமயம் என்ன நிலைப்பாட்டை எடுக்கப்போகின்றன என்ற கேள்வி எழும்பியுள்ளது.

இந்தநிலையில்தான் இலங்கையின் ஆட்சியாளர்கள் தமது வழமையான மந்திரக் கோலைக் கையில் எடுத்துள்ளனர். அதுதான் ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நியமித்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் தொடர்பான விசாரணை ஆணைக்குழு, கண்டி வன்முறைகள் தொடர்பாக ஆராய இன்னொரு ஆணைக்குழு என்பனவாகும். ஆனால், தற்சமயம் நிலவும் சூழல், இந்த ஆணைக்குழு நியமனம் என்ற மந்திரக்கோல், வலிமையாக பயன்படுமா என்பதும் சந்தேகமே.

ஏனெனில் அண்மையில் இடம்பெற்ற சில சம்பவங்கள் இலங்கை ஆட்சியாளர்களின் உண்மையான இனவாத முகத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

இலங்கையில் சுதந்திரதினத்தன்று பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ என்ற இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு அதிகாரியாகக் கடமையாற்றும் இராணுவ அதிகாரியால் ஆர்ப்பாட்டம் நடத்திய புலம்பெயர் தமிழ் மக்கள் மீது கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இவர் மணலாற்றுப் பகுதியிலிருந்து முல்லைத்தீவு நோக்கி முன்னேறிய இலங்கை இராணுவத்தின் 59ஆவது படையணியில் 11ஆவது கெமுனு படையணியின் பொறுப்பதிகாரியாகச் செயற்பட்டவர். இராஜதந்திர வழிமுறைகளை மீறிய இவரின் நடவடிக்கை பிரித்தானிய நாடாளுமன்றத்தில் பல பிரதிநிதிகளின் கடும் எதிர்ப்பலையை உருவாக்கியது.

இதன் காரணமாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அவரை உடனடியாகப் பதவி நீக்கம் செய்தது. இதில் தலையிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரின் பதவி நீக்கத்தை இரத்துச் செய்ததுடன், நாட்டுக்காகத் தியாகம் செய்த எந்தவொரு இராணுவத்தினரையும் தண்டிக்க அனுமதிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார். அது மட்டுமின்றி இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள விசாரணையில் சர்வதேச நிபுணர்களின் பங்களிப்புக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சம்மதம் தெரிவித்தமையாலேயே முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் பதவி பறிக்கப்பட்டதெனவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இப்படியான நடவடிக்கைகள் காரணமாக ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பிரித்தானிய அமைச்சர் மார்க் பீல்ட், "பிரித்தானியாவின் வீதியில் அதன் கௌவரத்துக்கு ஊறு விளைவிக்கும் வகையிலும், பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையிலும் மக்களை மிரட்டுவதையும் அனுமதிக்கமுடியாது" என்ற தனது கண்டனத்தைக் கடும் தொனியில் தெரிவித்திருந்தார்.

எந்தக் குற்றம் இழைத்தாலும் அதிலும் சர்வதேச மரபுகளை மீறும் அநாகரிகமான குற்றங்களை மேற்கொண்டாலும் ஆயுதப் படையினர் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்பதை ஜனாதிபதி சொல்லில் மட்டுமின்றிச் செயலிலும் நிரூபித்துள்ள நிலையில் ஜனாதிபதி ஆணைக்குழுவைச் சர்வதேசம் எப்படி நோக்கும் என்பதை நாம் புரிந்துகொள்ளமுடியும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சட்டமூலம் 2016இல் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் செப்ரெம்பரில் இடம்பெறவுள்ள நிலையில் ஓகஸ்டில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. பல இழுபறிகளின் பின் பல திருத்தங்களுடன் 2017 ஓகஸ்டில் நிறைவேற்றப்பட்டது. தற்சமயம் 2018இல் மனித உரிமைகள் பேரவையில் கூட்டத்தொடர் இடம்பெறும்போது ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இதன் ஆயுட்காலம் 3 வருடங்கள். எனவே இந்த ஆணைக்குழு தன் விசாரணைகளை முடித்து அறிக்கை சமர்ப்பிக்கும்போது இந்த அரசாங்கம் இருக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமுமில்லை. அதற்கிடையில் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றுவிடும். ஏற்கனவே நல்லிணக்க ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு என்பவற்றின் அறிக்கைகள் போன்றே இதுவும் கிடப்பில் போடப்பட்டால் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

அது மட்டுமின்றி இச்சட்டமூலம் குறிப்பிடும் ஒரு முக்கிய விடயம் கவனத்தில் எடுக்கப்படவேண்டும். அதாவது இவ்விசாரணை ஆணைக்குழுவின் முடிவுகளின் அடிப்படையில் நீதிமன்ற நடவடிக்கைகள் எதுவும் எடுக்கமுடியாது.

எனவே இக் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் அதன் விசாரணைக்குழு என்பன ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் காலத்தை இழுத்தடித்து தப்புவதற்கான ஒரு போலி நடவடிக்கை என்பது தெளிவானதாகும். அதன் காரணமாகவே காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இந்த ஆணைக்குழுவில் சாட்சியமளிக்கப்போவதில்லையெனத் தெரிவித்துள்ளனர்.

கண்டியில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட பேரழிவுகள், வன்முறைகள் தொடர்பாக விசாரித்து நடவடிக்கை எடுக்கவும் ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 250க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் - இதை திட்டமிட்டு வழிநடத்திய சூத்திரதாரிகளும் அவர்களுள் அடங்குகின்றனர். எனவும் தெரிவிக்கப்படுகிறது. கண்டி வன்முறைகள் இடம்பெற்றபோது மட்டக்களப்பு மங்களராம விகாரையின் பீடாதிபதி ஏன் அங்கு சென்றார் என்பதோ, கலவரம் இடம்பெற்றபோது பொதுபல சேனாவின் கிருலப்பனையிலுள்ள தலைமைச் செயலகத்தில் கலகொட அத்தே ஞானசார தேரர் நடத்திய ஊடகச் சந்திப்பில் "இது சிங்கள பௌத்த நாடு". இங்கு முஸ்லிம்கள் எப்படி நடக்கவேண்டுமென்பதை நாம் அவர்களுக்கும் சொல்லித் தருவோம்.

(18ஆம் பக்கம் பார்க்க)

■ ஜெயராணி




# வயதுவந்தோர்க்கு மட்டும்

பதின்ம வயதுப் பாலியல்கள் இங்கே சர்வ சாதாரணமாக நடக்கின்றன. பருவ வயது கர்ப்பம், அதனால் ஊட்டச்சத்துக் குறைபாடு, அதனால் இறப்பு, பால்வினை நோய்த் தாக்குதல்கள் போன்ற பிரச்சினைகளை இலட்சக்கணக்கான குழந்தைகள் எதிர்கொள்கின்றன என்கிறது உலக சுகாதார நிறுவனம். கருத்தரிக்கும் பெண்களில் 1000 பேருக்கு 62 பேர் பருவப் பிள்ளைகள். இந்த எண்ணிக்கை கலாசாரமே இல்லாதவை என நாம் நம்பும் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளை விடவும் அதிகம். அதனால், பருவமெய்துவதற்கு வெகு முன்னதாகவே குழந்தைகளுக்குப் பாலியல் அறிவு ஊட்டப்பட வேண்டும் என்பதுதானே சரியான தீர்வாக இருக்க முடியும்.

முந்தைய தலைமுறைகளுக்கு இதுபோன்ற விடயங்களைத் தெரிந்துகொள்ள மட்டுப்படுத்தப்பட்ட தகவல் மூலங்களே இருந்தன. ஆனால், இன்று எல்லாமே கையடக்கக் கருவிக்குள் கடலளவு கொட்டிக் கிடக்கின்றன. நாம் விரும்பவில்லை என்றாலும் குழந்தைகள் தெரிந்து கொண்டு விடுகின்றன. குழந்தைகள் அறிந்துகொள்ளும் விடயங்கள் குறித்துப் பொறுப்புடன் தெளிவுபடுத்த வேண்டியதுதான் நம் கடமை. சின்னஞ்சிறு மகனோ, மகளோ வந்து, தனது பிறப்புறுப்பிற்குப் பெயர் என்ன எனக் கேட்டால், எத்தனை பெற்றோரால் திணறாமல், சிரிக்காமல், கூச்சப்படாமல், கோபப்படாமல் சட்டெனச் சொல்ல முடியும்? இந்தச் சாதாரண விடயத்துக்குக்கூட நாம் தயாராகாமல் குழந்தைகளை ஆபத்துகளிலிருந்து காப்பாற்ற முடியும் என எப்படி நம்புகிறோம்!

குழந்தைக்குக் கற்பிக்க வேண்டுமானால் கலவியல் குறித்த அறியாமைகளிலிருந்து முதலில் பெற்றோர் விடுபட வேண்டும். மாதவிலக்கு என்பது தீட்டு, சுய இன்பத்தில் ஈடுபட்டால் ஆண்மைக் குறைவு, ஓரினச்சேர்க்கை என்பது மனநோய் என நமது பாலியல் அறிவிலேயே ஏகப்பட்ட ஓட்டைகள் இருக்கும்போது பிள்ளைகளுக்கு எப்படி சரியான அறிவைப் புகட்ட முடியும்? நாம் அறிவு ஒளிரும் இந்தத் தலைமுறைக் குழந்தைகளின் பெற்றோர். அவர்களின் கேள்விகளுக்கு பதில் சொல்ல, சந்தேகங்களைத் தெளிவுபடுத்த, குழப்பங்களைத் தீர்க்க 'வாயை மூடு' என்ற பழைய அங்குசம் உதவப்போவதில்லை! மிகவும் சிக்கலான இன்றைய உலகத்தில், மிக மிகச் சிக்கலானதாக இருக்கப்போகிற எதிர்கால உலகத்தில் நம் குழந்தை நல்வாழ்க்கை வாழ வேண்டுமெனில் அவர்கள் பெறும் நல்லறிவே அவர்களைக் காப்பாற்றும். அதற்காகவேனும் பெற்றோர் தங்கள் மனத்தடைகளை உடைத்து, பாலியல் அறிவை வளர்க்க முன்வர வேண்டும்.

கல்வி எப்படி குழந்தைகளின் அடிப்படை உரிமையோ அது போலத்தான் பாலியல் கல்வியும். வேண்டுமா? வேண்டாமா? என்ற விவாதத்திற்கே இதில் இடமில்லை. ஏனெனில், இது அவர்களின் வாழ்நாள் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை தொடர்பானது. பாலியல் கல்விமூலம் பாலுணர்வு மற்றும் பாலியல் இன்பம் இயல்பானவை எனக் குழந்தைகள் அறிகின்றன. நாம் தவறு செய்கிறோமோ என்ற குழப்பம் நீங்குகிறது. பாலியல் அறிவு பெருகும்போது பெண்களை முறைத்துப் பார்ப்பது, "வயது வந்தோருக்கான" படங்களைத் தேடுவது போன்ற சிற்றின்ப நடவடிக்கைகளில் ஈடுபாடு குறைகிறது. பக்குவப்பட்ட மற்றும் ஆரோக்கியமான உறவின் மீது நம்பிக்கை கொள்வார்கள்.

ஆபத்துகள் நெருங்கும்போது அதைக் கண்டுணரும் நுண்ணறிவு வளர்கிறது. பாதுகாப்பான உடலுறவு குறித்த, வரும் முன் காக்கும் வழிகளை அறிகிறார்கள். பாலியல் நோய்கள் குறித்த புரிதல் வளர்கிறது. பாலியல் ரீதியான குறைகள் இருப்பின் ஆரம்ப நிலையில் கண்டறியும் வாய்ப்பு பெருகுகிறது. வெளிப்படையாகப் பேச முடிகிற விடயத்தின் மீது நமக்கு மரியாதை உண்டாகும். பெற்றோருடன், நண்பர்களுடன், ஆசிரியர்களுடன் பேசக்கூடிய விடயமாக பாலுறவு மாறும்போது ஒவ்வொருவரும் தனது நடத்தையில் கண்ணியத்திற்கு இடமளிப்பார்கள்.

நம்மால் மாமாக்கள், தாத்தாக்கள், அண்ணாக்கள், சித்தப்பாக்கள், பெரியப்பாக்கள் என ஒவ்வொருவராகத் தேடித் தேடித் திருத்த முடியாது. ஒட்டுமொத்தக் குழந்தைகளுக்கும் பாலியல் புரிதலையும், பாலியல் சமத்துவத்தையும் உள்ளடக்கிய பாலியல் கல்வியை அளிக்கும் போது எதிர்காலத் தலைமுறை ஆரோக்கியமான சமூகமாக உருவாகும். அந்தச் சமூகத்தில் குழந்தைகள் தங்கள் பாதுகாப்பு குறித்த பயமின்றி, சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் வலம் வருவார்கள். பெற்றோராகிய நமது கடமை அப்படியான சமூகத்துக்கு தகுதியான மனிதர்களை நம் வீடுகளிலிருந்து உருவாக்கி அனுப்புவதே!

(நிறைய பேசுவோம்...)

## பெற்றோருக்குச் சில குறிப்புகள்

- குளிக்கும்போது, சமைக்கும்போது, தலைவாரும்போது, விளையாடும் போது, ரீ.வி. பார்க்கும்போது என எப்போதும் பாலியல் கல்வி அளிக்கலாம். அன்றாடமோ அவ்வப்போதோ நீங்களே அதற்கான சூழலை உருவாக்குங்கள்.
- இயல்பாகப் பேசுங்கள். தகாத விடயத்தைப் பேசுகிறோம் என்பதைப் போல இறுக்கமாகவோ மனத்தடையுடனோ பேசாதீர்கள். பொம்மை வாங்கும் போது உங்கள் முகமும் உடலும் எவ்வளவு சகஜமாக இருக்குமோ அப்படி. தெளிவான, நேரடியான அதே சமயம் உங்களுக்கு வசதியான வார்த்தைகளைக் கொண்டு பேசுங்கள்.
- எந்தச் சூழலிலும் யாரும் உடலைத் தொட அனுமதிக்கக் கூடாது எனக் கற்பிக்கவும். உடலில் குறிப்பாக பிறப்புறுப்பு, ஆசனவாய், மார்பகங்கள், வாய் போன்றவற்றில் காயமோ வலியோ இருந்தால் உடனே சொல்லச் சொல்லுங்கள்.
- குழந்தையின் நடவடிக்கையில் திடீரென மாறுதலை உணர்ந்தால் சும்மா மிரட்டிக்கொண்டிருக்காமல் ஆதரவாக விசாரியுங்கள். முடிந்தால் விடுப்பு எடுத்து வெளியே கூட்டிப் போங்கள். என்ன நடந்திருந்தாலும் நீங்கள் விட்டுக்கொடுக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கையை உருவாக்குங்கள்.
- குழந்தையை நம்புங்கள். தன்னை யாரேனும் தவறாக அணுகுவதாக, (அது உங்களுக்கு நெருக்கமானவராக இருந்தாலும்) குழந்தை சொன்னால் அலட்சியம் செய்யாதீர்கள். தவறு செய்தவரை விட்டு விலகுங்கள். அது குழந்தைக்கு உங்கள்மீதான நம்பிக்கையை அதிகரிக்கும்.
- தவறான எண்ணத்துடன் யாரேனும் அணுகும்போது, 'நோ' என உறுதியாக மறுக்கப் பழக்குங்கள்.
- பாலுணர்வு குறித்துப் பேசுங்கள். உங்களுக்குதான் அதில் முன் அனுபவம் இருக்கிறது. ஹஹஎனக்கும் அப்படித்தான் இருந்தது. நானும் இதைக் கடந்து வந்தேன்" என்று சொல்லும்போது குழந்தையின் ரென்ஷன் குறைகிறது. தகுந்த வயது வரும் வரை அந்த உணர்வுகளை எப்படிக் கையாள்வது என வழிகாட்டுங்கள். எல்லா உணர்ச்சிகளும் சரியானவை. ஆனால், எல்லாச் செயல்களும் சரியானவை அல்ல எனக் குழந்தை புரிந்துகொள்ளட்டும்.
- பாலியல் வல்லுறவு ஒரு குற்றச்செயல் என்பதையும், அதில் ஈடுபட்டால் சிறைத்தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்பதையும் எடுத்துச் சொல்லுங்கள். ஆண் பிள்ளைகளுக்கு இது குறித்த புரிதல் வேண்டும்.

# வாரன் அண்டர்சன்....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கலனில் 40 தொன் வரை வெகு அலட்சியமாக உயிர்க் கொல்லி வாயுக்களை அழுத்தி வைத்திருந்த பொறுப்பற்ற குற்றவாளியும் அவரே. அதனால் விபத்து நடந்தபோது அவர் பதற்றப்பட்டாரில்லை. அவரது இதயமும், முகமும் தொடர்புடைய நிறுவனங்களோ அல்லது நாடுகளோ பழியைச் சுமக்காமல் அதன் இழப்பீட்டைத் தானே ஒத்துக் கொள்ளும் நிலைக்கு வந்து நிற்கிறது. போபால் நிகழ்வு அதற்கு ஒரு முன்னோட்டமாகும்.

நீதியற்ற மரணம் என்பதை பதியவே அங்கு



வேதனையில் துடிக்கவில்லை, வாடவில்லை. வாயுவை கசியவிட்ட அவரது கண்கள் கசிந்திருக்கவில்லை. ஏனெனில் அவர் மட்டுமே குற்றவாளியில்லை என்பது அவருக்குத் தெரியும், விசாரணையில் பல பேரைத் தாண்டியே நீதியின் கரங்கள் அவரை தொட வேண்டியிருக்கும் என்பதையும் அறியாத அப்பாவியல்லர் அவர். அதனால்தான் அவரை நம் மக்கள் பிரதிநிதிகள் தனி விமானத்தில் இந்தியத் தன்மானத்தோடு சேர்த்து அனுப்பிவைத்தனர். அவரோ வசதியாக அமெரிக்காவின் மடியில் அமர்ந்து கொண்டு இந்தியாவை நலம் விசாரிப்பவராக இருந்தார்.

விபத்துக்கு காரணமாக “மெதைல் அய்சோசயனைட்” எனும் ஆலகால விஷம் என்பதை சொன்ன அரசுக்கு, அண்டேர்சன் குற்றவாளி என்று சொல்லத் தயக்கமிருந்தது. அதன்பின்னால் அமெரிக்க இலஞ்சமும், மிரட்டலுமிருந்தது. உலகின் மிக மோசமான விபத்திற்கு சமூகத்தின் விளிம்பு நிலை மக்களைப் பலி கொடுத்த அதிகாரவர்க்கம், விச வாயு பரவி நின்ற நிலையில் மருத்துவமனைகளைத் தேடி ஓடிவந்தவர்களுக்கு வாயுவின் தீவிரத்தைக் குறைக்கும் மருந்தான சோடியம் தியோ சல்பேட் ஊசி மருந்தை ஒரு கட்டத்தில் நிறுத்திக் கொண்டுவிட்டது. அதற்கு காரணம் மருந்தின் பற்றாக்குறை அல்ல, மாறாக, மக்கள் மரணிக்கக் கசிந்த குறிப்பிட்ட வாயுவே காரணமாயிருந்தது என்பதை சாட்சிப்படுத்தவும், அடையாளப்படுத்தவும் அதே மருந்துதான் தேவைப்படுவதாக இருந்தது. மக்கள் செத்தொழிந் தாலும், தங்களை வாழ வைக்கும் பன்னாட்டு நிறுவனத்தை காப்பாற்றுவது என்று முடிவெடுத்த அதிகார அரசியல்தான். இன்றைக்கு அணு விபத்து ஏற்பட்டாலும் அது சம்மதமில்லாதபோது ,அதை நீர்த்துப்போகச் செய்யும் வேலையில் ஈடுபட்ட அண்டேர்சனின் உள்ளூர் அடியாட்களைப் பற்றிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது. விபத்து நடந்த நாளில் காவல்துறையில் பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கை (FIR) காணாமல் போயிருந்தது. அதில் காணாமல்போனது அண்டர் சன் மட்டுமல்ல அவரால் பலி எடுக்கப்பட்ட போபால் மக்களுக்கான நீதியும்தான். கடந்த முப்பத்தி மூன்று ஆண்டு களாக இழுத்தடிக்கப்படும் - பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீட்டுத் தொகையை - இழக்கவே சம்மதிக்காத யூனியன் கார்பைட்டு ஆலை, போபால் மக்களின் நம்பிக்கையை இழந்திருக்கலாம். ஆனால் இனி வரும் காலங்களில் இந்திய மண்ணில் முதலீடு செய்யும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு, “என்ன நடந்தாலும் அரசு எம்மைக் காப்பாற்றும்,” என்ற நம்பிக்கையையும். அவர்களுக்கான சுபீட்சம்மிக்க எதிர்காலத்தையும் வழங்கிக் கொண்டுள்ளது.

வாழத் தகுதியற்றதாக்கி யிருக்கும் நிலத்தில் படிந்த நஞ்சை அகற்றுவதாக வாக்களித்த கார்பைடு ஆலையின் பினாமி நிறுவனமான NLS கெமிக்கல்ஸ் கடைசியில் அகற்ற முடியாது என்று கைவிரித்துவிட்டது. அது மட்டுமல்ல உலகமய சூழலில், இந்திய மக்களின் எதிர்காலத்தை இருளுக்குள் தள்ளிவிடும் போக்கில் பான்னாட்டு நிறுவனங்களின் எதிர்காலம் என்பது இங்கு ஒளிமயமாக இருப்பதை இன்றய நோக்கியா ஆலை முதல் அன்றய போபால் பூச்சிகொல்லி ஆலை வரை நமக்குச் சொல்வதாக இருக்கின்றன. நாளை கூடங்குளம் போன்றவை ரஷ்ய, அமெரிக்க நிறுவனங்களை ஒளிரச் செய்யலாம். பல்தேசிய நிறுவனங்களின் தேசமாகிவரும் இந்தியாவில் - ஒரு முறை மட்டும் பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறியும் நுகர்வோர் கலாசாரத்தில் - முதலில் தூக்கி எறியப்படுபவர்கள் அரசுக்கு வாக்களித்த மக்களாகவே இருந்து கொண்டுள்ளார்கள். பாவம் மக்கள் ஏணியாய்ப் போனவர்கள்?

நன்றி: கீற்று

# திருப்தி...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவள் மகன் படித்தே ஆகவேண்டும். அதற்காக வாழ்க்கையில் எந்தத் துன்பத்தையும் ஏற்கத் தயாரகிவிட்டாள்.

இனி எந்தத் துன்பம் ஏற்பட்டு என்ன செய்ய? தன் மகனின் கல்விக்கு குறுக்கே நிற்கிற கணவனையே வேண்டாமென்று ஒதுக்கி வைத்து விட்ட அவளுக்கு இனி எந்த சுமையைத்தானேற்று கொள்ளமுடியாது? நடைபெற முடியாத ஆசைகளுக்காக அவள் தன் வாழ்க்கையையே அழித்துக் கொண்டாள் என்று சொல்வதில் இந்த உலகம் திருப்திப்படத் தொடங்கியது. அவளுக்கும் திருப்திதான், புதிய வாழ்க்கைக்குத் தன்னைத் தயார் செய்து கொண்டதில்.

# காலம் கடத்தும்...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடித்தால் அடிப்போம், கொலை செய்தால் நாமும் கொலை செய்வோம்” என ஏன் சொன்னார் என்பதோ விசாரணைக்கு எடுக்கப்படமாட்டாது என நிச்சயமாக நம்பலாம்.

ஆனால், இவை பற்றி எவராவது கண்டனம் செய்தால் அவர்கள் சில சமயம் இனவாதத்தைத் தூண்டுகின்றனர் எனக் கைது செய்யப்படலாம்.

இப்படியான நிலையில் தமிழ், முஸ்லிம் தலைவர்கள் இந்த இரு விடயங்கள் தொடர்பாகவும் முஸ்லிம் நாடுகள், சர்வதேச நாடுகள் ஏழுப்பும் கேள்விகளிலிருந்து இலங்கையைக் காப்பாற்ற மௌனம் காக்கப் போகிறார்களா அல்லது உப குழுக்களில் உண்மைகளை விளக்கி இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் செயற்படப்போகிறார்களா என்பதுதான் எழும் கேள்வியாகும்.

இந்த ஆணைக்குழுக்கள் காலம் கடத்தவும், சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பவும் இலங்கை மேற்கொள்ளும் ஒரு போலி நடவடிக்கை என்பதை சர்வதேசம் ஏற்கும் வகையில் முன் வைத்தால் மட்டுமே ஆக்கபூர்வமான சில விழைபலன்களைப் பெறமுடியும் என்பது மட்டும் மறுக்கமுடியாத உண்மை. அதைச் செய்வதில் தமிழ், முஸ்லிம் தலைமைகள் பின்னின்றால் அவர்கள் தமது இனங்களுக்கு மட்டுமின்றி நீதிக்கும் நியாயத்துக்கும் கூடத் தூரோகம் செய்தவர்களாவார்கள்.

# புதுவிதி...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

எது கிடைக்கிறதோ அதைச் சாப்பிட்டோம். எங்கே படுக்க வாய்த்ததோ அங்கேயே படுத்தோம். படுக்கையும் தூக்கமும் இல்லாமலே பல இரவுகளைக் கடக்க வேண்டியதாயிற்று. அதையும் தாங்கிக் கொண்டோம். பசி வயிற்றோடு காட்டிலும் கடலிலும் பயணிக்கும் வாழ்க்கை அமைந்தது. ஆனால், எதுவும் பெரும் சுமையாக இருந்ததில்லை. என்னதான் கடினமான நிலை இருந்தாலும் எதையிட்டும் துக்கப்பட்டதில்லை என்றைக்கும். சனங்களுக்காக எதையாவது செய்கிறோம் என்ற நிறைவு சந்தோசத்தைத் தந்தது.

எல்லைப் புறங்களில் காவல் இருப்பது ஒரு சுகம். காணியில்லாதவர்களுக்கு காடுகளை வெட்டிக் கொடுப்பது எல்லையற்ற மகிழ்ச்சி. கிணறு இல்லாத கிராமங்களில் கிணறுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு முயற்சி எடுத்து, அதைச் செய்து முடிப்பது சந்தோசம். சனங்களைத் தாக்க வரும் படையினரை மோதிச் சிதைப்பது கொண்டாட்டம். இந்த மாதிரிக் காரியங்கள் செய்வது அப்படியே வாழ்க்கை முறையாகிற்று. பகலும் இரவும் நினைவும் கனவும் இந்த மாதிரி வேலைகளே என்றானது. சனங்களை விட்டு வேறு எதைப்பற்றியும் சிந்திக்க முடியவில்லை. சனங்களும் அப்படித்தான். தங்களில் ஒருவராக, தங்கள் உறவுகளாகவே எங்களைப் பார்த்தனர். இந்த உறவு சாதாரணமானது. எளியது. இடைவெளியும் ஏற்ற இறக்கமும் இல்லாதது.

கையில் பணமிருந்தால்தான் எதையும் செய்யலாம் என்று நீங்கள் நினைக்கக்கூடும். கை நிறையப் பணம் இருந்தாலும் எதையும் செய்யாமல் இருப்பவர்களையும் நீங்கள் அறிவீர்கள். அதிகாரம் இருந்தால்தான் எதையும் சாதிக்க முடியும் என்று நீங்கள் எண்ணக் கூடும். அதிகாரத்தைக் கையில் வைத்திருப்போர், அதை எப்படியெல்லாம் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

இன்று அரசியலும் அதைச் செய்வோரும் எப்படியெல்லாம் ஆகிவிட்டனர் என்று பார்க்கும்போது சிரிப்பு வருகிறது. ஆனால், அப்படிச் சிரிக்கும் நம்மைப் பார்த்து, பைத்தியங்கள் என்றே சிரிப்பார்கள் இந்த “மன்னர்கள்”. என்ன செய்வது, காலம் மாறிவிட்டதல்லவா! கவலைப்படுவதால் பயனொன்றுமில்லை.

“புதுவிதி” வேறு விதமாக அமைந்தால்தான் புது வழியுண்டு.

# ஆரிட்டைச் சொல்லி அழ?

**இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்**

## கிரிக்கெற் மச்சும் கிரிசகேடும்

போன வியாழக்கிழமை காலமை பத்து மணி இருக்கும். கிளிநொச்சிக்குப் போக வேணுமெண்டு யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டுக்கு வந்தன். கொஞ்ச நேரத்திலை செத்த வீட்டுக்கு அடிக்கிற மேளச் சத்தம் கேட்டுது. அதோடை ஆரோ ஒப்பாரி வைச்சுக் கத்திற மாதிரியும் கிடந்திது. இதன்னெடா ஒரு நாளும் இல்லாத மாதிரிப் பிணத்தைக் கொண்டு ரவுணுக்கை வந்திட்டாங்களோ? எண்டு நினைச்சுக் கொண்டு, ஓடிப்போய்ப் பவர்கவுஸ் றோட்டுப் பக்கம் பாத்தால், விசர்தான் வந்திது. கொஞ்சப் பள்ளிக்கூடத்துப் பெடியள் தலையையும் வாயையும் மூடிக் கட்டிக் கொண்டு சன்நதியிலை உருவந்து ஆடுறவையள் ஆடுறமாதிரி ஆட்டம் எண்டால் கண்கொண்டு பாக்கேலாத ஆட்டம்.

அண்டைக்கு யாழ்ப்பாணத்திலை பள்ளிக் கூடங்களிக்கு இடையிலை கிரிக்கெற் மச்சாம். அதுக்காக யாழ்ப்பாணத்திலை உள்ள ஒரு பெரிய பள்ளிக் கூடத்தின்ரை பெடியள் கொஞ்சப் பேராச் சேந்து பறையைக் கொண்டு வந்து அடிச்சுக் கொண்டு கடை கடையா ஏறிக் காசு சேர்க்கினம். ஏனெண்டு கேட்டால் செலவுக்காம்.

பள்ளிக்கூட யூனிபோம் போட்டபடி வாள்வெட்டுக் கோஷ்டியைப் போல முகத்தைக் கைலேஞ்சியளாலை கட்டிக் கொண்டு "என்ரை ஐயோ எண்டு கத்தினபடி காசு கேட்டு ஆக்களுக்கு ஒரே கரைச்சல். சில கடையள் குடுத்தவை. சில ஆக்களும் குடுத்தவை. பிள்ளைக்கு விளையாட்டு. நாய்க்குட்டிக்கு உயிர் போனதாம். அதைப்போலை அவைக்கு பொழுது போக்கும், விளையாட்டும். ஆனால் அதிலை நிண்ட ஆக்களுக்கும், வாகனங்களுக்கும் கரைச்சல் குடுக்கிறதா நினைக்காமல் பாட்டுப் பாடி ஆட்டமும் காசு வேட்டையும்.

அப்ப அதிலை பாத்துக் கொண்டு நிண்ட ஒரு ஆள் சொன்னார். வீட்டிலை கேட்டால் காசு குடுக்கமாட்டினம் எண்டு பெடியளின்ரை கள்ள விளையாட்டு உது. ஏனென்டால் உந்தப் பள்ளிக்குடத்திலை படிக்கிற பெடியள் பெரும்பாலும் வசதியான குடும்பத்திலைதான் பிறந்து வளந்தவங்கள். அதாலை தாய்தேப்பனி ட்டைக் காசில்லாமல் விடாது. அவை வேணுமெண்டுதான் குடுக்காமல் இருக்கினம் போலை. உது காசைச் சேத்து மற்ற விளையாட்டு விளையாடப் போயினமோ தெரியாது.

கொழும்புப் பள்ளிக் கூடத்திலை உப்பிடித்தான் கிறிக்கெற் மச் எண்டு துவங்கினால் பெடியள் எல்லாம் பல பிரிவாப் போய் காசைச் சேத்து கிரிக்கெற் மச் நடக்கிற கிறவுண்ட்ஸ்ஸிலை ஒரு பக்கம் மச் நடக்கும். மற்றப் பக்கம் வெளியிலை புல்லுக்கை பவுன்றி லையினிலை கனக்க விழுந்து கிடக்கும். சில நேரம் விளையாடுற ஆக்கள் பவுன்றி அடிச்சால் அந்தப் பந்து வந்து அவங்கள் எடுக்கிற சத்தீக்கையும் விழும். பிறகு வேறை பந்தைப் பாவிக்கிற நேரமும் உண்டு. சிலபேரை அம்புலன்ஸிலை ஏத்திற மாதிரித் தாய் தேப்பன் காறைக் கொண்டு வந்து ஏத்திக் கொண்டு போறதும் உண்டு. அங்கை உது சகஜம். ஏனெண்டால் தேப்பனும் பெடித்தரவளியிலை அவர் படிச்ச பள்ளிக்கூடத்திலையும் அப்பிடித்தான் செய்திருப்பர். தாய்மாரும் மச்சுகளுக்குப் போறதாலை அவைக்கும் உது புதுசில்லை. அது அவையின்ரை கலாசாரம். அதை இஞ்சை நாங்கள் பின் பற்றேலாது.

நேற்றைக்கு டீ.எஸ் ஒபிசிலை காணி சம்பந்தமா ஒரு ஆளைப் பாப்பம் எண்டிட்டுப் போனன். அவர் ஒரு பெரிய ஆள். அங்கை அவற்றை மேசையிலை பைலுகள் குவிஞ்சு கிடக்கு. ஆளை மேசையிலை காணேல்லை.இருந்திருந்து பாத்திட்டு அங்கை நிண்ட பியோனிட் டைப் போய்க் கேப்பமெண்டிட்டுக் கிட்டப் போனன். அவன் ஒரு கடுமையான பார்வை பாத்தான். உடனை வெத்திலைப் பையை நீட்டினன். உடனை ஆள் சுருண்டு போய் "என்ன பெரியவர் கன நேரமா நிக்கிறியள் , என்ன விசியம்?" எண்டு கேட்டான். விசியத்தைச் சொன்னன். உடனை அவன் சொன்னான் "ஆள் இரண்டு நாளைக்கு வரார். உங்களைப் போலைதான் ஆக்கள் வந்து வந்து திரும்பிப் போயினம். பொறுப் பில்லாமல் வேலையை விட்டிட்டு தான் படிச்ச பள்ளிக்கூடத்தின்ரை கிரிக்கெற் மச் நடக்குதாம் பாக்கப் போவிட்டார்." கவுன்மென்ட் வேலையிலை இருக்கிற ஒருத்தர் அவருக்கு எத்தினை வேலை அவற்றை ஒபிசிலை இருக்கும். அதை விட்டிட்டுப் போய் கிரிக்கெற் மச் பாக்கிறதெண்டால், என்ன விளையாட்டு உது?

பொதுவா அரசாங்க நிவுனங்களிலையும், திணைக்களங்களிலையும் உங்களுக்கு ஏதேன் வேலை இருந்தால் போய் சாதாரணமாச் செய்யப் பாருங்கோ. முதல் அங்கை உள்ள பியோன் வலிய வந்து கேட்பன் என்னத்துக்கு வந்தனியள் எண்டு. அவனுக்கு விசியத்தை எல்லாம் சொன்ன உடனை எல்லாத்தையுங் கேட்ட விதத்திலை ஏதோ செய்து தரப்போறான் எண்டு நினைச்சால், பிறகு வாங்கோ எண்டு கூட்டிக் கொண்டு ப்போய் ஒராளைக் காட்டி இவையளோடை கதையுங்கோ எண்டு விடுவன். பிறகு பியோனுக்குச் சொன்ன மாதிரி முதலிலை இருந்து திரும்பவும் சொல்ல வேணும். அவையும் எல்லாத்தையும் கேட்டுப்போட்டு அங்கை போங்கோ எண்டு சொல்லி பிறகும் வேறை ஒராளிட்டை அனுப்புவர். இதே மாதிரி எங்களை ஒருகைபாத்து "றில்" பழக்கிப்போட்டுத்தான் விடுவினம்.



"றில்" எண்டு சொல்லேக்கைதான் பள்ளிக் கூட ஞாபகம் வருகிது. அதோடை கிரிக்கெற் விளையாட்டின்ரை ஞாபகமும் வருகுது.

கிரிக்கெற் மச் எப்ப வரும் எண்டு நாக்கைத் தொங்கப் போட்டிட்டு இருக்கிற ஆக்களும் இருக்கினம். மச்செண்டு லீவெடுத்துக் கொண்டு வெளி நாட்டிலை இருந்து வந்து கிரிக்கெற் மச்சை ஒரு திருவிழாமாதிரிக் கொண்டாடுற ஆக்களும் இருக்கினம். மச்சடிக்கிற அந்தந்தப் பள்ளிக்கூடத்துப் பெடியள் மட்டுமில்லை, பழைய மாணவர்கள் எண்டு தங்களைச் சொல்லிக் கொண்டு போறவையும் உப்பிடியான சந்தர்ப்பத்திலை தான் தங்களோடை படிச்சகூட்டாளிமாரோடை குடிச்சுக் கும்மாளம் போடுறதா வைத்திய சோதி மாஸ்டரும் சொன்னவர். கலை, கலாசாரம், பண்பாடு எண்டுமட்டுமில்லை எல்லா வகையிலையும் நாங்கள் திசைமாறின பறவையாளாப் போனம். ஒரு பொலிஸி இல்லாத சமூகமா நாங்கள் காற்றடிக்கிற திசைக்குப் பறக்கப் பழகிவிட்டம். அது பறவாயில்லை. ஆனால் அது எங்கை எங்களைக் கொண்டு போய்விடும் எண்டு சொல்லேலாது. சில நேரம் முள்ளுப் பத்தைக்குள்ளையும் கொண்டு போய் இறக்கிப்போடும். உப்பிடி எல்லாவிதத்திலையும் சீரழிஞ்சுப் போய் கிடக்கிறதை ஆரிட்டைச் சொல்லி அழ?

**- கோள்அரங்கன்**


## நா ஆட நம் தேசம்



சூரியன் உதிக்கின்றது
மழை பெய்கிறது
மரங்கள் குதூகலிக்கின்றன
பூக்கள் மகிழ்கின்றன
வெவ்வேறான மனிதர்கள்
நடமாடுகின்றார்கள்
ஏதோ ஒரு நாட்டில்
இருந்து உணவும்
ஆடம்பரப்பொருட்களும்
தருவிக்கப்படுகின்றன
சிலருக்கு....
பெரிய வீடுகளில்
விருந்துபசாரங்கள்
ஆனால்
அகதிகளின் வயிறுகள்
மட்டும் நிரம்பவில்லை
அகதிகளுள் அபாதைகளைக்
அநாதரவற்ற பயணம்
தொடர்கின்றது
சூரியன் உதிக்கின்றது..

**- ஆ.முல்லைதிவ்யன்**

## அந்தக் குரல்!



என்னை நொறுக்கிப்போடும்
சிலவற்றிடம்
மாட்டிக்கொள்கிறேன்.

நான் வீடு திரும்பவில்லை
என்னை மரணத்திடம்
ஒப்படைக்கிறேன்.

நான் வீடு திரும்பவில்லை
என்னைக் கொலை செய்ய அந்தக்
குரலை அனுமதிக்கிறேன்.

நான் வீடு திரும்பவில்லை
இதயத்தின் மேல் பாறாங்கல்லை
உருளவிடுகிறேன்.

நான் வீடு திரும்பவில்லை
இப்படியே உங்களோடு
பேசிக்கொண்டே வீடு செல்வதைத்
தவிர்க்கிறேன்.

நன்றி – சொல்வனம்

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு

19

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா

சாப்பிட்டு முடித்த பின்பு சின்னப்பர், “இரவைக்கு நில்லுங்கோவன் ஒரு பண்டி வெடி வைச்சுக் கொண்டு போகலாம்” என்றார்.

“என்னண்டண்ணை இஞ்சையிருந்து காவிறது? பொழுது படத் தானே போறம்... மடுவுக்கை இறங்கினாப் போலை பாப்பம்”, என்றார் முருகர்.

சின்னப்பரும் அதை ஏற்றுக்கொண்டார்.

திரும்பி வரும்போது அருவி யாற்றைக் கடந்து, வண்டில் பாதையால் வந்து ஒற்றையடிப் பாதையால் இறங்குமிடம் வந்த போது முருகர், “தம்பியவை நாங்கள் இனி வேற ஒரு பாதை யால போவம். நேரை போய் உங்கட இடத்திலை மிதக்கும்” என்றார்.

நால்வரும் வண்டில் பாதையால் நடந்து சிறிது தூரம் சென்ற பின்பு வலப்புறமாகத் தென்பட்ட ஒரு ஒற்றையடிப் பாதையில் இறங்கினர். ஏறக்குறைய இரண்டு மணித்தியாலங்கள் நடந்த பின்பு ஒரு தார் வீதியைக் கடக்க வேண்டி வந்தது.

“தம்பி.. இது மதவாச்சி றோட்டு.. இதைக் கடந்து கொஞ்சத் தூரம் போக குருக்களூரின்ரை பின் பக்கம் வரும். அதால போய் வவுனியா றோட்டைக் கடந்து கொஞ்ச இடம் போக பண்டிவிரிச்சான் குளம் வரும். பிறகென்ன அப்பிடியே அலைகரையாலை போக கீரிசுட்டான் தானே? நாங்கள் போன இடத்துக்கு இந்தப் பாதை வலு கிட்ட. ஆனால் வலு அவதானமாய் இருக்க வேணும்”, என்று கூறிவிட்டு நடக்க ஆரம்பித்தார் முருகர்.

அவர்கள் பின்புறமாகக் குருக்களூரைக் கடந்தபோது கிராமம் இருளில் உறைந்து போய்க்கிடந்தது. ஏதோ ஒருவித மயான அமைதி நிலவுவதாகவே சிவத்துக்கு தோன்றியது. அவர்கள் வவுனியா வீதியை அண்மித்த போது வீதியில் ஒரு பிரகாசமான வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. நால்வரும் பின் வாங்கிப் பற்றைகளுக்குள் படுத்துக் கொண்டனர். வந்த வெளிச்சம் சற்றுத் தொலைவில் வந்ததும் அணைந்தது. நால்வரும் உடனடியாகவே தங்கள் துப்பாக்கிகளைத் தயார் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டு தனித்தனி இடங்களில் போய்ப்படுத்துக் கொண்டனர். வெளிச்சம் அணைக்கப்பட்டதுமே ஏதோ ஒரு அசம்பாவிதம் நடக்கப் போவதைச் சிவம் புரிந்து கொண்டான். உடனடியாகவே நால்வரும் துப்பாக்கிகளைத் தயார் நிலையில் வைத்துக்கொண்டு தனித்தனியான மறைவிடங்களில் பதுங்கிக் கொண்டனர். மீண்டும் வாகனத்தின் லைற் எரிந்தது.

கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் ஒருவனை இன்னொருவன் எழுந்து முழங்காலில் நிற்க தள்ளி விட்டவன் அவனைக் காலால் உதைத்துவிட்டு ஏதோ கத்தினான். அவனின் கையில் மின்னிய ஒரு வாள் லைற் வெளிச்சத்தில் பளபளத்தது. அவர்களைச் சுற்றி மேலும் நால்வர் சூழ்ந்து கொண்டனர். நின்றவர்களில் ஒருவன் முழங்காலில் நின்றவனைக் கையால் காட்டி ஏதோ சொல்ல மற்றவன் வாளை ஓங்கினான்.



சிவம் இனித் தாமதிக்க நேரமில்லை என்பதைப் புரிந்துகொண்டான். வாளை ஓங்கியவனின் நெற்றியை இலக்குவைத்து துப்பாக்கியின் விசையை அழுத்தினான். அவன் அப்பிடியே சுருண்டு விழுந்தான். மலையவன், முருகர், சோமர் முதலியோரின் துப்பாக்கிகளும் முழங்க மேலும் இருவர் விழுந்தனர். மற்ற இருவரும் ஓடிப்போய் வாகனத்தில் ஏறி அதை வேகமாகக் கிளப்பினர். சிவம் ரயரை இலக்குவைத்து சுட்டபோதும் அது வேகமாகப் புறப்பட்டதால் குறி தப்பிவிட்டது. அந்த “ஹையர்ஸ்” வாகனத்தின் பல இடங்களில் துளையிடப்பட்ட போதும் அது வீதியின் வளைவான இடமாதலால் கண்களில் இருந்து மறைந்து ஓடித் தப்பிவிட்டது.

அவர்கள் போய்விட்டனர் என்பது உறுதியான போதும் சிவம் மிகவும் எச்சரிக்கையுடனேயே அவர்கள் விழுந்து கிடந்த இடத்துக்கு வந்தான். அவனைக் கண்டதும் கைகள் கட்டப் பட்டவன் எழுந்து நின்றான். சிவம் அவனைப் பற்றிப் பொருட்படுத்தாமல் விழுந்து கிடந்தவர்களை ரோச் லைற்றை அடித்துப் பார்த்தான். மூவரும் இறந்து விட்டதை உறுதி செய்து கொண்டான்.

பின்பு சிவம் மற்ற மூவரையும் மறைவிலிருந்து வெளியே வரும்படி அழைத்துவிட்டு அருகில் நின்றவனின் கைக் கட்டை அவிழ்த்து விட்டான்.

அருகில் வந்து ரோச் லைற்றை அடித்து அவனின் முகத்தைப் பார்த்த முருகர், “டேய்.. நீ.. பதினோராம் கட்டை கந்தசாமியல்லோ?”, என்றார்.

அவனும் முருகரை அடையாளம் கண்டுவிட்டான்.

“ஓமப்பு... நான் தான்” என்றான் அவன்.

“என்னடா? என்ன நடந்தது?” எனக் கேட்டார் முருகர்.

“என்னை வெட்டவெண்டு கொண்டு வந்தவங்கள். நல்ல காலமாய் நீங்கள் கண்டதால தப்பியிட்டன்” இன்னும் அவனின் குரலில் நடுக்கம் தீரவில்லை.

“அப்பு இதிலை நிக்கிறது ஆபத்து. விசயத்தை ஆறுதலாய் விசாரிப்பம். இப்ப காட்டுக்கை இறங்குவம்”, என்றான் சிவம்.

“ஓமோம் எங்கடை எல்லையுக்கை போய்ச் சேருவம் செத்தவங்களுக்கு அவங்கடை ஆக்கள் வந்து கருமாதி செய்யட்டும்”, என முருகர் மெல்லச் சிரித்தபடி சொல்லிக்கொண்டு மதவுக்கு அருகில் தெரிந்த ஒரு அறுத்தோடியில் இறங்கி காட்டுக்குள் நடக்கத் தொடங்கினார்.

அவர்கள் காட்டுக்குள்ளால் நடந்து சிறிது தூரத்தில் போய்க் கொண்டிருந்தபோது பிரதான வீதியால் கனரக வாகனங்கள் வேகமாக ஓடும் ஒலி கேட்டது.

சோமர் கிண்டலாக, “தம்பி.. ஆமிக்காரர் பிரேதம் தூக்கப் போறாங்கள்”, என்றார்.

மலையவன், “சை.. பிழை விட்டிட்டமண்ணை”, என்றான்.

சிவம், “என்னது?, எனக் கேட்டான்.

“நிண்டிருந்தால் அவங்களிலை நாலு பேரையும் போட்டிருக்கலாமண்ணை”, என்றான் மலையவன்.

“சாமத்திலை ஆமி வாறதெண்டால் பெருந்தொகையாத்தான் வருவாங்கள். நாங்கள் இரண்டு ஏ.கேயையும், இரண்டு வேட்டைத் துவக்குகளையும் வைச்சு கிரிக்கட்டே விளையாடுறது”

மலையவன் அதன் பிறகு எதுவும் பேசவில்லை. ஆனால் மனதில் சண்டைக்கு துணிவு மட்டும் இருந்தால் போதாது, முன் யோசனையும் தந்திரங்களும் வேண்டும் என்பது அவன் மனதில் வந்து உறைத்தது. காடு அவ்வளவு சிரமமாக இருக்கவில்லை. ஆங்காங்கே குறுக்கிட்ட ஒற்றையடிப்பாதைகள் அவர்களின் பயணத்தை இலகுவாக்கின. ஏறக்குறைய ஒரு மணிநேரம் நடந்த பின்பு ஒரு குளத்தின் வால்கட்டுப்பக்கம் அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

சிவம் அந்த இடத்தை நன்றாக அவதானித்துவிட்டு முருகரிடம், “அப்பு.. இது பண்டிவிரிச்சான் குளமல்லே?” எனக் கேட்டான்.

முருகர், “ஓ.. இப்படியே குளக்கட்டிலை போய் துருசடியால இறங்கினால் ஊருக்குள்ளை போகலாம். நேரை காட்டுக்காலை போனால் தட்சிணாமருதமடு அலைகரையிலை போய் மிதக்கலாம்” என்றார்.

“காட்டுக்காலை போவம்”, என்ற சிவம், “கந்தசாமியண்ணை என்ன நடந்ததெண்டு நடந்து கொண்டே சொல்லுங்கோ, கேப்பம்” எனக் கதையைத் தொடங்கி விட்டான்.

நிறுவனம் ஒன்றில் காவலாளியாக கடமையாற்றும் கமலநாதன் என்பவன் கந்தசாமியின் தங்கை பாடசாலையால் வரும் போது பத்தாம் கட்டையில் காட்டுக்குள் இழுத்துச்சென்று பலவந்தமாக கற்பழித்துவிட்டான். அவள் வீட்டில் வந்து சொல்லி அழுதுவிட்டு அன்றிரவு கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டாள்.


கமலநாதன் இராணுவத்துடன் இணைந்து செயற்படும் தமிழ் ஆயுதக் குழுவுக்கு வால் பிடித்துத் திரிபவன். கந்தசாமி அவனை வீதியில் கண்டு கத்தியுடன் விரட்டிய போது அவன் காட்டுக்குள் ஓடித் தப்பி விட்டான்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

# வேறுகிரகங்களில் நாம் எவ்வளவு காலம் வசிக்கலாம்?

அடுத்த தலைமுறை செழிப்பாக வாழ இந்தப் பூமியை ஏற்றதாக வைத்திருக்கிறோமா என்ற கேள்வி அனைவருக்கும் தோன்றும்.

அதற்கான பதில் நமக்குத் தெரிந்த ஒன்றுதான். ஒரு வேளை நமது பூமியில் இடமில்லாமல் போனாலோ அல்லது பூமியின் தன்மை மாறிப்போனாலோ நாம் அனைவரும் வேறு கிரகங்களுக்கு இடம்பெயரும்






நிலை ஏற்படலாம். அப்போது என்ன செய்வோம்? ஏற்கனவே செவ்வாய்க் கிரகத்தில் கொலனி ஒன்று அமைத்து மனிதன் வாழ வைக்க ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமும், நாஸாவும் தயாராகி வருகின்றன.

மனிதனால் வேறு கிரகங்களில் வாழ முடியுமா?

நஷனல் ஜோக்ரபிக் சனல் மேற்கொண்ட ஓர் ஆய்வின்படி இந்தப் பூமியில் இருந்த 99.9 சதவீத உயிர்கள் அழிந்துவிட்டன. மனிதன் பூமியை விட்டுக் கிளம்ப எத்தனிக்கிறான். இயற்கை அன்னையின் ஆணைப்படி இப்படி ஒரு மாற்றம் நிகழும் போது அதற்கு ஏற்றவாறு பழகிக் கொள்ள வேண்டும். இல்லையேல் அதனால் நாம் அழிக்கப்படுவோம். அப்படிப்பட்ட ஒரு நிகழ்வுதான் நாம் இன்று கற்பனைசெய்யப்போவது. மனிதன் பூமியை விட்டு வெளியேறும் சூழ்நிலை வந்தால் மற்ற கிரகங்களில் அவனால் எவ்வளவு காலம் வாழ முடியும் என்பதை நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா?

சூரியனுக்கு மிக அருகில் இருக்கும் கிரகம் புதன் (Mercury). சூரியனை எதிர்கொள்ளும் பக்கம் சுமார் 800 டிகிரி பரனைட் அதிக வெப்பத்துடன் இருக்கும். இதன் மறுபக்கம் -290 டிகிரி பரனைட்டாக இருக்கும். இதில் இரண்டிலுமே மனிதன் வாழ்வதற்கான சூழல் இல்லை. நீங்கள் சூரியனின் பக்கம் இருந்தால் ஒரு கார்பன் கல்லாகவும் மறுபக்கம் இருந்தால் முழுவதுமாக உறைந்தும் போவீர்கள். இந்த இரண்டு நிலைகளுக்கு இடையில் உங்கள் மூச்சை நிறுத்தி வைத்திருக்கும் வரை உங்களால் வாழமுடியும். மிஞ்சி மிஞ்சிப் போனால் அந்த நேரம் என்பது வெறும் இரண்டே நிமிடங்கள்தான்.

வெள்ளி (Venus) சூரியனில் இருந்து இரண்டாம் கிரகம். பிட்சா தயாரிக்கும் 'அவன்' வெப்பத்தை விட அதிகமான வெப்பமுடைய கிரகம்தான் வெள்ளி. 900 டிகிரி பரனைட் வெப்பம் கொண்ட கிரகத்தில் மனிதனால் நிச்சயம் வாழ முடியாது. ஆனால், இங்கு என்ன நல்ல விடயம் என்றால் பூமியில் உள்ள அதே ஈர்ப்பு விசை அங்கேயும் இருக்கிறது. எனவே அதிக வெப்பத்தால் ஆவியாகும் வரை நம்மால் நடக்க முடியும். அதுவும் "வா மா மின்னல்" போல ஒரு நொடிக்கும் குறைவாகவே நமக்கு நேரம் கிடைக்கும்.

செவ்வாய் (Mars) மிகவும் குளிர்ச்சியான கிரகம். அதில் காற்றின் தன்மையும் மெல்லியதாக இருப்பதால் குளிரின் தாக்கத்தைச் சற்று குறைவாகவே நம்மால் உணர முடியும். நீங்கள் செவ்வாயில் உயிர் வாழ ஆசைப்பட்டால் உங்களை வெப்பமாக வைத்துக்கொள்ள உதவும் வெது வெதுப்பான உடைகள் உடுத்தி, உங்கள் மூச்சை நிறுத்திப் பிடித்துக் கொள்ளுங்கள். அப்படிச் செய்தீர்கள் என்றால் இரண்டு நிமிடங்கள் வரை செவ்வாய் கிரகத்தில் ஒரு குட்டி ரூர் அடிக்க முடியும்.

வியாழன் (Jupiter) ஒரு வாயு கிரகம் என்பதால் மனிதனுக்கு அது என்றுமே சாதகமாக இருந்ததில்லை. இங்கிருக்கும் அதிக காற்றழுத்தம் காரணமாகப் பூமியில் இருந்து இங்கு தரையிறங்கும் போதே நாம் நசுக்கப்படுவோம். எனவே ஒரு நொடிக்கும் குறைவான நேரமே நமக்குக் கிடைக்கும்.

வியாழன் போலவே அதன் அடுத்தடுத்து.கிரகங்களான சனி (Saturn), யுரேனஸ் (Uranus) மற்றும் நெப்டியூன் (Neptune) ஆகியவையும் வாயு கிரகங்கள். சனியின் வளையங்கள் உறைந்துபோன நீர்த்துளிகள் அல்லது அமோனியாவின் துளிகளால் உருவானது. இது எந்தவகையிலும் மனிதனுக்கு உதவுவதில்லை. எனவே இங்கேயும் அதிக காற்றழுத்தம் காரணமாக நாம் தரையிறங்கும் போதே நசுக்கப்பட்டுத் தூக்கி எறியப்படுவோம்.

சனி கோளின் சிறப்பம்சமே அதற்கு இருக்கும் 53 சந்திரன்கள் தான். அதில் டைட்டன் எனப்படும் சனியின் சந்திரனில் திரவ மீத்தேன் ஏரிகள் மற்றும் நல்ல வானிலை உள்ளது. டைட்டனில் தண்ணீர் கிடையாது, ஆனால் மீத்தேன் அடிப்படையிலான வாழ்க்கை வாழ முடியுமா என சில விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள். டைட்டனில் உங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஒரு பிரீதிங் மாஸ்க் மற்றும் வெதுவெதுப்பான உடை மட்டுமே போதுமானது.

புளூட்டோ கிரகம்தான் இருப்பதிலேயே சிறிய கிரகம் (Dwarf Planet). அதன் பரப்பளவு எவ்வளவு தெரியுமா? ரஷ்யாவின் பரப்பளவுதான் புளூட்டோவின் மொத்த இடம். சொல்லப்போனால் இது ஒரு மிதக்கும் பெரிய பாறை மட்டுமே. இங்கு காஸ்மிக் ரேடியேஷன்ஸ் மற்றும் குளிரின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் மனிதன் வாழ முடியுமா என்ற கேள்வி இருந்துகொண்டே இருக்கிறது.

மாஸ்க், ரோபோ, பயோ - அசிஸ்டன்ஸ் என தொழில்நுட்ப சாதனங்கள் கொண்டு ஒரு கருவியைப்போல வாழும் வாழ்க்கையைத் தான் பிற கோள்களில் நம்மால் தொடங்கமுடியும். யாருக்குத் தெரியும் போகப்போக அதுவும் பழகிவிடும் என்ற நம்பிக்கை மனிதனுக்கு வந்துவிடும் வாய்ப்புகள் அதிகம். எனவே பூமியைத் தவிர எங்கு மனிதன் போனாலும் அவன் மனிதனாக, இயல்பாக வாழ முடியாத நிலைதான் உள்ளது. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உதவியால் நாம் அங்கே உயிருடன் இருக்க முடியுமே தவிர, மனிதனாக இங்கே இருப்பது போல, ஒரு வாழ்கை நடத்த முடியாது. இதைப் புரிந்து கொண்டாவது நம் பூமியை காக்க முயற்சி செய்வோம்.



# கைகொடுக்கும் 'கருவி'

**பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணம் 4**

**எமது** சமூகத்தில் மனிதம் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதற்கும், ஜீவகாருண்யம் இன்னும் அடிபட்டுப் போகவில்லை என்பதற்கும் கருவியின் செயற்பாடுகள் சாட்சியாக உள்ளன.

ஏனெனில் இது போன்ற நிறுவனங்களின் வெற்றி என்பது ஒரு குழுமத்தின் செயற்பாட்டோடு நிறைவு பெறுவதல்ல. சமூகத்தின் முழுமையான பங்களிப்பும் அதை உறுதி செய்கிறது. பிறநாட்டிலிருந்து வருகின்ற பலர் அவர்களோடு சேர்ந்து தமது குடும்ப விழாக்களைச் செய்கிறார்கள். தமது குடும்பத்தில் மறைந்தவர்கள் நினைவாக அறக்கொடைகளை வழங்குகின்றனர். அவர்களது சிறிய மண்டபத்தில் புத்தக வெளியீடுகள் மற்றும் கலந்துரையாடல்கள் போன்ற பல இலக்கிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

சொல்லப் போனால் சமூகம் அவர்களது பணியை நன்றாக அறிந்திருக்கிறது. அவர்களை நன்றாகப் புரிந்திருக்கிறது . அதனாலேயே பல விடயங்கள் சாத்தியமாகின்றன.

"மாற்றுத் திறனாளிகளால் மாற்றுத்திறனாளிகளுக்கு" என்று உருவாக்கப்பட்டதே கருவி நிறுவனம்.

2013 ஆம் ஆண்டு ஜூன் 12 ஆம் திகதி இந்த நிலையம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. 2013 இல் இந்த நிறுவனத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்திருந்தாலும், அதற்கு முன் அதன் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் அவரவர் மட்டங்களில் வலுவிழந்தோருக்கான சமூகப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தவர்கள். அப்படிப்பட்ட சமூகப் பணியாளர்களின் ஒன்றுகூடலே கருவியை உருவாக்கியிருக்கிறது.

"மாற்றுத்திறனாளிகளை சமூக விருத்தியில் ஆரோக்கியமான பங்காளராக்குவது" என்ற முக்கிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த நிறுவனத்தின் நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் அமைந்திருக்கின்றன" என்கிறார் அந்த நிறுவனத்தின் தலைவர் தர்மசேகரம். அவரும் ஒரு மாற்றுத் திறனாளியாவார். பிறவியிலே பார்வையற்ற இவர் நல்லூர் பிரதேச காரியாலயத்தில் சமூகவள நல ஆலோசகராகப் பணியாற்றுகிறார். பல்கலைக்கழகத்தில் உளவியல் சார் கற்கை நெறியைக் கற்றவர்.

இதேபோல இந்நிறுவனத்தின் செயலாளர் யசிதரனும் ஒரு மாற்றுத்திறனாளியாவார். பார்வையற்ற பட்டதாரி. கோப்பாய் பிரதேச சபைக் காரியாலயத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமை புரிபவர். இவர்கள் போலவே இந்நிறுவனத்தின் பிற அங்கத்தவர்களில் பலர் பெரும்பாலும் மாற்றுத்திறனாளிகளாக இருக்கிறார்கள். இவர்கள் இந்நிறுவனத்திற்காகத் தொண்டு அடிப்படையிலேயே தம் பணிகளைச் செய்து வருகிறார்கள்.

கருவி - மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம் 374 நிரந்தர அங்கத்தவர்களைக் கொண்டது. இந்த நிறுவனத்தினூடாக மாதந்தோறும் ஏறத்தாழ ஆயிரம் பேர் வரை பயனடைகின்றனர். இதில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயம், போருக்குப் பின்னால் வலுவிழந்தோர் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்திருக்கிறது. போர் நடந்து கொண்டிருந்தபோது அதனால் பாதிக்கப்பட்டு அங்கவீனர்கள் ஆக்கப்பட்டவர்கள் வாழ்க்கை ஒரு விதமும், போர் நிறைவடைந்த பின்னால் அவர்கள் வாழ்க்கை இன்னொரு விதமும் அமைந்ததை எம்மில் பலர் கூர்ந்து அவதானித்திருந்தனர்.

அவர்கள் சமூகமயப் படுத்தப்பட்ட போது பல பிரச்சினைகளை எதிர்கொண்டார்கள். அதில் முக்கியமாகக் குடும்ப மட்டங்களிலே ஏற்பட்ட உடைவுகள் - அதாவது முக்கியமாகக் குடும்பப் பிரிவுகளைக் குறிப்பிடலாம். அதுவே அவர்களைப் பாதித்த முக்கியமான விடயம். பிரிவுகள் என்கின்றபோது கணவர் வலுவிழந்தவராக இருந்தால் மனைவி அவரை விட்டுப் பிரிந்து செல்வதும், மனைவி வலுவிழந்தவராக இருந்தால் அவரை விட்டுக் கணவன் பிரிந்துசெல்வதும் அதிகரிக்கத் தொடங்கியிருந்தது. இதற்குரிய மாற்றுத்திட்டத்தை வைத்து அவர்களைப் புனர்வாழ்விற்கு உட்படுத்திச் செம்மைப்படுத்த வேண்டிய தேவை அவர்களது சமூகத்திற்கு இருக்கிறதென்பதை மனதிற்கொண்டே இந்த சமூக செயற்பாட்டு மையத்தை உருவாக்கியிருக்கின்றனர்.

ஆரம்பத்தில் சில தற்காலிகமான வசதிகளை தமது அங்கத்தவர்களுக்குச் செய்துகொடுப்பதன் மூலம் அவர்களை நிரந்தரமான வாழ்வாதார நீரோட்டத்திற்குள் கொண்டு வருவதையே தமது பிரதான இலக்காகக்கொண்டு இயங்கி வருகின்றனர்.

அந்த இலக்கை அடைவதற்கான முன்முயற்சியாக தற்போது நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தற்காலிமாக இயங்கிவருகின்ற அவர்களது நிறுவனத்தை இந்த வருட இறுதிக்குள் ஒரு நிரந்தர இடத்திற்கு மாற்றுவது என்று திட்ட மிட்டுச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதற்கான காணியைப் பெற்றுக் கொள்ள முயற்சியைப் பிரதான இலக்காகக் கொண்டிருக்கின்றனர்.

'கருவி' யின் மேலதிகச் சமூகப் பங்களிப்பு பற்றித் தலைவர் தருமசேகரத்திடம் இருந்து பெற்றுக் கொண்ட இன்னும் பல தகவல்கள் தொடருகின்றன.




> "எமது சொந்தத் தயாரிப்பான திரவ சலவைச் சவர்க்காரத்தை "சைன்" என்ற பெயரிட்டு கருவி சைன் என்ற அடையாளத்தோடு மக்களுக்கு விற்றுவருகிறோம். அதற்கு சந்தையில் பெருமதிப்புண்டு. அதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட ஒரு தனியார் நிறுவனம் அதுபோன்று போலியாகத் தயாரிக்கப்பட்ட தயாரிப்பொன்றை மாற்றுத் திறனாளிகளை வைத்துச் சந்தைப்படுத்தி வருகிறது. இது எமக்குப் பல இடர்களைத் தோற்றுவிக்கிறது. இப்படியான விடயங்களை எதிர்த்தும் நாம் போராட வேண்டி இருக்கிறது"

"வலு" என்ற காலாண்டுச் சஞ்சிகை ஒன்றையும் கருவி நடத்தி வருகின்றது. இந்தச் சஞ்சிகையானது வலு விழிப்புடன் கூடிய மக்கள் பற்றிய கருத்தியலைச் சமூக மட்டத்தில் பரம்பலடையச் செய்கின்ற நோக்கோடு வெளிவந்து கொண்டிருக்கிறது. அந்தச் சஞ்சிகையானது மக்கள் மத்தியில் கணிசமான வரவேற்பைப் பெற்றிருக்கிறது. வழமையாகச் சஞ்சிகைகள் எதிர்கொள்ளக்கூடிய போராட்டங்களுக்கும், சவால்களுக்கும் மத்தியில் தொடர்ந்து வெளிவந்து 16 இதழைத் தொட்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம்.


"எமது நிறுவனத்தால் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அலகு ஒன்றும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அந்த முயற்சியினூடாக "சைன்" என்கின்ற திரவ சலவைச் சவர்க்காரம் ஒன்றை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகிறோம். இது முற்றுமுழுதாக எமது பகுதியிலே நடைபெறும் பொது முயற்சி. இதற்கு நல்ல ஆதரவும் ஒத்துழைப்பும் சமூக மட்டத்திலிருந்து கிடைத்துவருகிறது. அத்துடன் இதனை அங்கத்தவர்களினூடாக நேரடியாகவே சந்தைப்படுத்துகிறோம். மேலும் சந்தைப்படுத்துதலை விஸ்தரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அதனூடாக வெற்றிகரமான வாய்ப்பொன்று இந்த உற்பத்திக்குக் கிட்டுமென்று ஆணித்தரமாக நம்புகிறார். அத்துடன் வேறு பல உற்பத்திகளையும் வெளிக்கொண்டுவரும் முயற்சிகளில் கருவி அங்கத்தவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இதன் நோக்கம் என்னவெனில் வலுவிழந்தோருக்கான தொழில் வாய்பை நேரடியாகவும், மறைமுகமாகவும் வழங்குவது. அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துவது என்ற அடிப்படையிலேயே திட்டமிடப்படுகிறது. மட்டுப்படுத்தப்பட்ட வளங்களோடும் குறைந்த வசதிகளோடும் இந்த உற்பத்தியை மேற்கொண்டு வருகிறோம்.

எமது நிறுவனத்தினூடாக அங்கத்தவர்களுக்கு வட்டியில்லாத கடன் வசதி செய்து கொடுக்கிறோம். இதனூடாக அவர்கள் சுயதொழில் வாய்ப்பை மேம்படுத்திக் கொள்ளுகிறார்கள். அதோடு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பண்ணைத்தொழிலை விரும்புபவர்களுக்கு ஆடு, மாடு என்பனவற்றை வழங்குகிறோம். மிளகாய்த்தூள் மற்றும் மா அரைத்து விற்பவர்களுக்கு உரிய உபகரணங்களை வழங்கி வருகிறோம். அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்குக் கற்றலுக்கான உபகரண உதவிகளையும் செய்து வருகிறோம். வலு விழந்தவர்களிடையே தமது வாழ்வாதாரத்திற்குரிய நிதியை உழைத்துப் பெறமுடியாது நலிவுற்றிருப்போருக்குச் சுழற்சிமுறையிலே உலர் உணவுப் பொருட்களை வழங்கிவருகிறோம். இதற்குப் பொது மக்கள் தரும் ஆதரவு மகத்தானது.



ஒரு கண்ணடிப்பில் ரசிகர்களை கவிழ்த்தவர் பிரியா வாரியர். புருவ அழகி எனப் பிரபலம் ஆகிவிட்டவரின் தாக்கம் இப்போது பொலிவூட்டிலும் எதிரொலித்துள்ளது.

'சென்னை எக்ஸ்பிரஸ்' படத்தை இயக்கிய ரோகித் செட்டி இயக்கும் 'சிம்பா' படத்தில் நாயகியாக நடிக்க பிரியா வாரிய ரிடம் பேச்சு நடத்தப்படுகின்றது. இப்படத்தின் நாயகனாக ரன்வீர் சிங் நடிக்கவுள்ளார்.



அரசியலில் திடீரெனக் குதித்த கமல், அதே வேகத்தில் கட்சியின் பெயரையும் அறிவித்து மக்கள் சந்திப்புக்களையும் நடத்தி வருகின்றார்.

இந்த நிலையில், சங்கரின் இயக்கத்தில் உருவாகவிருந்த 'இந்தியன் - 2' படம் தள்ளிச் செல்கிறது. காரணம் '2.0' படத்தின் பணிகளே.

இதற்கிடையே 'விஸ்வரூபம் 2' படத்தின் வேலைகளை முடுக்கி விட்டிருக்கிறார் கமல்.





ஹன்சிகாவுக்கு எதிராக
வரின் முகாமையாளர்
டகர் சங்கத்தில் முறைப்பாடு
செய்துள்ளார்.
முன்னணி, இளம்
யகர்களுடன் வலம்வந்த
ன்சிகா வசம் தற்போது
சால்லிக் கொள்ளும் அளவுக்கு
ாய்ப்புகள் இல்லை.
இந்நிலையிலேயே ஹன்சிகா
ளக்கு சம்பளம் வழங்கவில்லை
ன்று முறைப்பாடு செய்துள்ளார்
வரின் முகாமையாளர்
னுசாமி.

அஜித்தின் அடுத்த படத்தை வினோத் இயக்கவுள்ளார். இந்தப் படத்தை மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் கணவர் போனி கபூர் இயக்கவுள்ளார்.

அஜித் தற்போது சிறுத்தை சிவாவின் இயக்கத்தில் விசுவாசம் படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படம் பற்றிய அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனத் தெரியவருகின்றது.

பிரியாமணி
ருமண வாழ்வை
தாடங்கியிருந்தார்.
ருமணத்துக்கு முன்பே
டிக்கத் தொடங்கிய
டத்தை இப்போதுதான் முடித்திருக்கிறார்.

கன்னட மொழியில் தயாராகியுள்ள இந்தப் படத்தில் பிரியாமணி அரசியல்வாதியாக நடித்துள்ளார். தமிழில் வெளியான 'கொடி' படத்தின் மறுதயாரிப்பே இந்தப் படம். த்ரிஷா நடித்த பாத்திரத்தில் ப்ரியாமணி இந்தப் படத்தை நடித்துள்ளார்.



ாடிகள்' படத்தின்
ம் பாகம்
ப்படுகின்றது. இந்தப்
சசிக்குமார், அஞ்சலி,
பாஸ்கர், அதுல்யா, பரணி
 நடித்து வருகின்றனர்.
படத்தைத் தொடர்ந்து
ண்டியன்' படத்தின்
ம் பாகத்தையும்
ப்படும் என
ப்பட்டுள்ளது.
ல் வெளியான இந்தப்
சசிக்குமார், லட்சுமி
கியோர் நடித்திருந்தனர்
றிப்பிடத்தக்கது.





# இடமாற்றம்

இன்று(மார்ச் 17) நடைபெறவுள்ள ஐ.எஸ்.எல். உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி கொல்கத்தாவில் இருந்து பெங்களூருக்கு மாற்றப்படுவதாகச் சில தினங்களுக்கு முன்னர் ஐ.எஸ்.எல் போட்டி நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. மிகப்பெரிய தொடர்களில் போட்டி ஆரம்பமாவதற்கு சில வாரங்களுக்கு முன்னதாகவே போட்டி அட்டவணை வெளியிடப்படும். தவிர்க்க முடியாத சில காரணங்களால் ஓரிரு போட்டிகள் இடமாற்றத்துக்கு ஆளாகுமே தவிர மற்றப்படி இடமாற்றம் ஏற்படுவதில்லை.

இந்நிலையில் கொல்கத்தாவில் இருந்து இறுதிப்போட்டியை பெங்களூருக்கு மாற்றியமை சில கொல்கத்தா ரசிகர்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இந்தியாவில் உதைபந்தாட்ட ரசிகர்களை அதிகம் கொண்ட மாநிலமாக விளங்குவது கொல்கத்தாவே. அந்தவகையில் ரசிகர்களது அதிருப்தி நியாயமானதே.

ஆனாலும் இம்முறை நடைபெற்ற போட்டிகளில் அத்லெரிக்கோ கொல்கத்தா அணி புள்ளிப்பட்டியலில் ஒன்பதாவது இடத்தைப் பிடித்ததனால் அரையிறுதிக்குக்கூட முன்னேற முடியவில்லை. அதேசமயம் இம்முறை புதிய அணியாகக் களமிறங்கிய பெங்களூர் அணி புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்து அரையிறுதிக்கும் தகுதி பெற்றிருந்தது. அத்தோடு பெங்களூரில் நடைபெற்ற லீக் போட்டிகளில் ரசிகர்களின் ஆதரவும் அமோகமாக இருந்தது.

எனவே உதைபந்தாட்டத்தை இந்தியாவில் பரவல் அடையச் செய்வது ஐ.எஸ்.எல். போட்டி நிர்வாகத்தின் நோக்கங்களில் ஒன்றாக விளங்குவதனால் பெங்களூர் ரசிகர் பட்டாளத்தை மேலும் உள்ளீர்க்கவே இறுதிப்போட்டியை இடம்மாற்றியதாகக் கருதப்படுகின்றது.



# உன்னைப்போல் ஒருவன்

இலங்கை அணியில் லசித் மலிங்கவின் எதிர்காலம் கேள்விக்குள்ளான நிலையில் அவரைப் போலவே பந்துவீசும் வீரர் ஒருவர் தற்போது இனங்காணப்பட்டுள்ளார். அம்பலாங்கொடவைச் சேர்ந்த 23 வயதான நுவான் துஷார என்ற வீரரின் அண்மைக்காலப் பந்துவீச்சுப் பெறுபேறுகள் ஊடகங்களின் பேசுபொருளாக அவரை மாற்றியுள்ளன. அந்த வகையில் இலங்கையில் கடந்த வாரம் நடைபெற்று முடிந்த உள்ளூர் இருபதுக்கிருபது தொடரில் கொழும்பு கிரிக்கெட் கழகம் சார்பில் விளையாடிய நுவான் துஷார இறுதிப்போட்டியில் நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றி இருந்தார்.

அச்சு அசலாக மலிங்கவின் பந்துவீச்சைப் போலவே பந்து வீசும் நுவான் துஷார தான் இரண்டு தடவைகள் மலிங்கவைச் சந்தித்துள்ளதாகக் கூறுகின்றார். அத்தோடு ' மக்கள் என்னை மலிங்கவைப் போன்று பந்து வீசுவதாகக் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் உண்மையில் அவரது பாணியைப் பின்பற்றி நான் பந்து வீசவில்லை. மாறாக சிறுவயது முதலே எனது பந்துவீச்சுப் பாணி இதுதான் ' என்கிறார்.

ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த இவர் ஆரம்ப காலங்களில் பெரும்பாலான வீரர்களைப் போன்று ரென்னிஸ் பந்திலேயே விளையாடியுள்ளார். ஆனாலும் இவரது பந்துவீச்சுப்பாணியை அவதானித்த இவரது நலன்விரும்பிகள் இவரை மடை மாற்றி தேசிய அணியை நோக்கி நகர்த்தி உள்ளார்கள். மலிங்கவும் இவரது பந்துவீச்சுப்பாணியை அவதானித்து சில பந்துவீச்சு நுணுக்கங்களைக் கற்றுக்கொடுத்தும் உள்ளார். அத்தோடு தேசிய அணியில் இடம் பிடிப்பதற்கு இன்னும் வெகுதூரம் செல்லவேண்டுமெனவும் கூறியுள்ளார்.

# விலகல் முடிவு

5 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற ரஷ்யாவின் மகளிர் ரென்னிஸ் நட்சத்திரமான மரியா ஷரபோவாவும் அவரது பயிற்சியாளராக 4 வருடங்கள் கடமையாற்றிய ஸ்வென் குரோனேவெல்ட்டும் விலகுவதற்கு முடிவு செய்துள்ளனர். நெதர்லாந்து நாட்டவரான ஸ்வென் குரோனேவெல்ட் ஷரபோவாவிற்கு முன்னதாக மொனிக்கா செலஸ், கரோலின் வொஸ்னியாக்கி, இவானோவிக் போன்ற வீராங்கனைகளுக்கும் பயிற்சியாளராக விளங்கியவர்.

இவரது பயிற்சியின் கீழேயே ஷரபோவா 2014 ஆம் ஆண்டு பிரெஞ் ஓபன் தொடரைக் கைப்பற்றி இருந்தார். ஆனாலும் அதற்குப் பிறகு கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வெல்ல முடியாமல் தடுமாறி வருகின்றார். ஊக்கமருந்துப் பாவனையால் 15 மாதத் தடையை அனுபவித்து அதிலிருந்து மீண்டு வந்தாலும் சரபோவாவின் அண்மைக்காலப் பெறுபேறுகள் சொல்லிக்கொள்ளும் படியாக இல்லை.

இந்தவருடம் இதுவரை விளையாடிய போட்டிகளில் 5 போட்டிகளில் மட்டுமே அவர் வென்றுள்ளார். அதுவும் முதற்சுற்றுப் போட்டியிலேயே. இந்தியன் வெல்ஸ் மாஸ்ரர்ஸ் தொடரில் இரண்டு முறை சம்பியன் பட்டம் வென்ற சரபோவா இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற இந்த வருடத் தொடரில் தர வரிசையில் 44 ஆவது இடத்தில் இருக்கும் ஜப்பான் வீராங்கனையான ஒசாகாவிடம் முதற்சுற்றுப் போட்டியில் அடைந்த தோல்வியின் பின்னரேயே இருவரும் இந்த முடிவுக்கு வந்துள்ளார்கள்.




# இது தேவையா?

அவுஸ்ரேலியாவின் உள்ளூர் அணிகள் பங்குபற்றும் ஷெபீல்ட் சீல்ட் கிண்ணத் தொடரில் கடந்தவாரம் பிரிஸ்பனில் குயின்ஸ்லாண்ட் – மேற்கு அவுஸ்ரேலிய அணிகள் பங்கு பற்றிய 5 நாள் டெஸ்ட் போட்டி நடைபெற்றது. இதில் அவுஸ்ரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக 10 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய மத்தியூ ரென்ஷா இந்தப்போட்டியில் குயின்ஸ்லாண்ட் அணிக்காக விளையாடி இருந்தார். இந்தப்போட்டியில் அவர் விளையாட்டாகச் செய்த ஒரு காரியம் மேற்கு அவுஸ்ரேலிய அணி 5 ஓட்டங்களைப் பெனால்ரியாகப் பெறுவதற்கு வழிசமைத்துள்ளது.

போட்டியின் ஒரு கட்டத்தில் மேற்கு அவுஸ்ரேலிய அணிவீரர் ஒருவர் ஸ்குயார்லெக் திசையில் பந்தைத் தட்டி விட்டு ஒரு ஓட்டத்தை எடுப்பதற்காக ஓடியுள்ளார். இதன் போது அந்தப் பந்தைப் பிடிப்பதற்காக குயின்ஸ்லாண்ட் அணியின் விக்கெட் காப்பாளர் ஜிம்மி பியர்ஸன் கையுறையை கழற்றிவிட்டு ஓடிச் சென்று பந்தை எடுத்து விக்கெட்டை நோக்கி எறிந்துள்ளார். அப்போது ஸிலிப்பில் நின்ற மத்தியூ ரென்ஷா அவரது கையுறையை தான் போட்டு பந்தைப் பிடித்து பந்துவீச்சாளரிடம் எறிந்துள்ளார்.

கிரிக்கெட் விதிப்படி களத்தடுப்பில் ஈடுபடும் வீரர்களில் விக்கெட் காப்பாளர் மாத்திரமே கையுறை அணிய முடியும். அதனால் மத்தியூ ரென்ஷா செய்த சிறுபிள்ளைத் தனத்தால் எதிரணிக்கு 5 ஓட்டங்கள் வழங்கப்பட்டன.



ஆனாலும் அந்தப் போட்டியில் குயின்ஸ்லாண்ட் அணி 211 ஓட்டங்களால் வெற்றி பெற்ற தனால் அந்த 5 ஓட்டங்கள் சர்ச்சையை ஏற்படுத்த வில்லை.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 17.03.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.